# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 7
மார்ச் 2022
விலை ரூ 10/-


## மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு
2022 பிப்ரவரி 26,27
திருச்சி







- **மார்ச் 7**
  பகுதி நேர பணியாளர்கள்
  மின்வாரிய தலைமையகம் முன்பு
  கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்
- **மார்ச் 16**
  ஒப்பந்த தொழிலாளர்கள்
  சென்னை மின்வாரிய தலைமையகம்
  முன்பு ஆர்ப்பாட்டம்
- **மார்ச் 23**
  நிரந்தர ஊழியர்கள்
  வட்டமேற்பார்வையாளர் அலுவலகம்
  முன்பு ஆர்ப்பாட்டம்

## பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாத்திட

## மார்ச் 28,29 வேலை நிறுத்தம்



# 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு



சென்னை
தலைமையகம் முன்பு





கோயம்பத்தூர்




செங்கல்பட்டு



கடலூர்

# 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு















## 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு












# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**மார்ச் 2022**


**உள்ளே....**


- ★ தேசத்தின் பொதுத்துறைகளை காக்க..
- ★ மின்துறையை சீரழிக்கும் மின்சார சட்டத்திருத்ததை அனுமதிக்கலாமா
- ★ புதிய பாதையில் மின்சார வாரியம்
- ★ சமூக பாதுகாப்புகளை இல்லாமல் செய்வது தான் அரசுகளின் வேலையா
- ★ பெண்களுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்க சர்வதேச பெண்கள் தினம்
- ★ பகுதி நேர பெண்கள் மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம்
- ★ காகிதமில்லாத பட்ஜெட்
- ★ வேலையில்லாமமைக்கு யார் காரணம்
- ★ மாநில பொதுக்குழு முடிவுகள்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# தேசத்தின் பொதுத்துறைகளை காக்க! வேலை நிறுத்தத்தில் சங்கமிப்போம்!

தேசத்தின் பொதுத்துறைகளை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு விற்பதற்கு குத்தகைக்கு விடுவதற்கு, ஒரு மோசடி கூட்டம் ஆட்சி அதிகாரம் கையில் இருக்கிறது என்ற எண்ணத்தில் துடியாய் துடிக்கிறது. பொதுத்துறைகளை பலப்படுத்துவதற்கு பதிலாக, அங்குல அங்குலமாக சிதைக்கிறது.

வரலாறுகளை மறைத்து, சுதந்திர போராட்ட வீரர்களை தியாகிகளை வரலாற்று பக்கங்களில் கிழித்தெறிந்து, சுதந்திர போராட்ட காலத்தில் பிரிட்டிஷ் கம்பெனியிடம் மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்தவர்களை தியாகிகளாக மாற்றுகின்றனர். வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு திரித்து கற்பிக்க ஆர்.எஸ்.எஸ்-ன் கொள்கைளை பின்பற்றுபவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

உழைப்பாளி மக்கள் போராடி பெற்ற உரிமைகளை பறித்து அவர்களை புதைகுழியில் தள்ளி விட்டு மகிழ்ச்சியை கொண்டாடும் அரசாக இருக்கிறது ஒன்றிய பி.ஜே.பி. அரசு.

தேசத்தின் வளர்ச்சியில் பங்காற்றிய மின்சாரம், நிலக்கரி, போக்குவரத்து, ரயில்வே, எல்.ஐ.சி, வங்கி இவற்றையெல்லாம் இந்திய பெருமுதலாளிகளும் கார்ப்பரேட்டுகளும் பங்கு போட்டு கொள்ளையடிக்க, அவர்களது பாதங்களை சிரம்மேற்கொண்டு செயற்பட்டு வருகிறார்கள்.

“கண்ணிரெண்டும் விற்று சித்திரம் வாங்கினால் ” கைகொட்டி சிறியாரோ! என்றான் பாரதி.

ஆம்! மோடி அரசாங்கம் கண்கள் என்கிற ஜனநாயகத்தை கார்ப்பரேட்டுகளுக்கு விற்று, அடிமைகளாக நம்மை ஆக்க நினைக்கிறார்கள். நம் பாட்டனும்,

முப்பாட்டனும் போராடி பெற்ற உரிமைகளையும், உருவாக்கிய பொதுத்துறைகளையும் எந்த நிலையில் விற்க விட மாட்டோம் என சூளுரைப்போம்! மார்ச் 28,29-ல் வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம்!

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தலில் வெற்றிகளை பறித்த மகிழ்ச்சியில் திமுக அரசு உள்ளது. மகிழ்ச்சி ஆனால் இன்னமும் தமிழக உழைப்பாளி மக்களின் அடிப்படை கோரிக்கைக்கள் மீதும், துறைவாரியான ஊழியர்களின் கோரிக்கைகள் மீதும் கவனம் செலுத்தாமல் நிதி ஆதாரம் சரியல்ல என கீரல் விழுந்த ரெக்காடாக பாடி வருவது சரியல்ல! நம்முடைய கவலையெல்லாம் மீதமுள்ள நான்காண்டுகளும் இது பல்லவியாகி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

ஏனெனில் மின்துறையில் மின் கொள்முதலில் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்ய முழுவீச்சில் நமது உற்பத்தி நிலையங்களை ஈடுபத்தி மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் ஊழியர்கள் சம்பளம் அதிகம் என கருதி Out Sourcing செல்வது, லாபத்தை ஈட்டித்தர இயலாது என்பது அறிந்தும், தனியார் முதலாளிகளிடம், Out Sourcing முறையில் பணிகளை பார்க்க திட்டமிட முயல்வதை மின் ஊழியர் மத்திய அமைப்பு அனுமதிக்காது. வேடிக்கையும் பார்க்காது, இது ஒரு நவீன உழைப்பு சுரண்டலாக மாறும்.

நிதி நிலையை காரணம் காட்டி, ஊதிய உயர்வை, பதவிகளை அனுமதிக்க மறுப்பது நியாயமல்ல! என்பதை வாரிய நிர்வாகமும், அரசும் உணர வேண்டும்.

மின்வாரியத்தில் பணியாற்றி வரும் நூற்றுக்கணக்கான பகுதிநேர பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால் வீறு கொண்டு எழுந்து போராடும் நிலைக்கு தள்ளப்பட்டனர். 07.03.2022 அன்று நடைபெற்ற போராட்ட நிகழ்வு மாற்றத்தை ஏற்படுத்தி வாரிய தலைவரிடம் உறுதிகளை பெற முடிந்தது.

போராடித்தான் பெற முடியும் எனில் போராட்டங்களும் தவிர்க்க முடியாது. மின்வாரித்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை சென்னைக்கு திரட்டி அடையாளம் காண வலியுறுத்தி மத்திய அமைப்பு 16.03.2022-ல் களம் காண இருக்கிறது.

பொதுத்துறைகளில் 10 ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் செய்வோம் என தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை திமுக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி கவனத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டமாக நடக்கவுள்ளது. அரசும் கவனம் செலுத்தும் என்ற நம்பிக்கையில் காத்து இருக்கின்றோம்.

மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள் இவர்களோடு வேலையில்லாத ஐடிஐ உள்ளிட்ட தொழிற்நுட்பம் படித்த இளைஞர்களும், பட்டம் பெற்ற இளைஞர்களும் காத்துகிடக்கிறார்கள். விடியலை நோக்கி! விடியலை திமுக அரசு தரும் என்ற எதிர்பார்ப்பில்.....

# மின்துறையை சீரழிக்கும் மின்சார சட்டத்திருத்தத்தை அனுமதிக்கலாமா?




- எஸ். இராஜேந்திரன்

நவீன சமுதாயத்தில் மின்சாரம் இல்லாமல் எந்த மனிதனும் வாழ முடியாது. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், விவசாயத்துறையில் பசுமைப்புரட்சிக்கும் அடிப்படை காரணியாய் அமைந்துள்ளது. இன்று மின்சாரம் நமது அன்றாட வாழ்வில் காற்று, நீர் என்பது போல இன்றியமையாத ஒன்றாவி விட்டது.

இந்திய சுதந்திரத்திற்கு பின்னர், தேசத்தின் முன்னேற்றத்திற்கு மின்சாரம் இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்து 1948-ல் மின் விநியோக சட்டம் உருவாக்கப் பட்டது. இந்தியாவின் முதல் மின்சாரத்துறை அமைச்சர் பாபாசாசேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், மின்சார துறை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்தால் தொழில் வளர்ச்சிக்கும், விவசாயத்திற்கும் ஏற்ப மின் உற்பத்தி செய்ய திட்டமிட முடியும் என உறுதியாக சொன்னார். அது தான் இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில் தங்களது தேவைக்கேற்ப மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து, விநியோகம் செய்து தொழில் வளர்ச்சி மற்றும் விவசாயத்தில் பசுமை புரட்சியை அடைய முடிந்தது. அதோடு 1948-ல் மின் வழங்கல் சட்டம் உருவாக்கப்பட்ட 40 ஆண்டுகளிலேயே 80 சதவீதமான கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டது. மின்வாரியம் பொதுத் துறையாக இருந்த காரணத்தால் தான் இந்தியா முழுவதும் 2 கோடிக்கு மேல் விவசாய மின் இணைப்புகள் மாநில மின்வாரியங்களால் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியா பட்டினி தேசத்திலிருந்து உணவு உபரி நாடாக மாறியது. 1990-1991 ஆம் ஆண்டு காலத்தில் வேகமாக அமல்படுத்தப்பட்ட நவீன தாராளமயக் கொள்கை மின்துறையையும் விட்டு வைக்கவில்லை. நவீன தாராளமயக் கொள்கையை மின்துறையில் அமலாக்கவே, மின்சார சட்டம் 2003, மின்சாரக்கொள்கை 2005, போன்றவைகளை கொண்டு வந்து அமலாக்க துவங்கின.இந்த துறையில் லாபம் ஈட்டலாம் என பெரு முதலாளிகளும் கார்ப்பரேட்டுகளும் நினைத்ததின் விளைவு தான் மத்திய அரசு மின்சாார சட்டத்திருத்த மசோதா 2014,2015,2018,2020,2021 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் அமலாக்க முயற்சித்து தோல்வியை தழுவியது.

இதே கால கட்டத்தில் 2011 ஆம் ஆண்டில் அமெரிக்க செனட்டில் சமுதாயத்திற்கு மின்சாரத்தின் முக்கிய பங்கை உணர்த்தும் வகையில் 2012 ஆம் ஆண்டை அனை வருக்கும் மின்சாரம் அவர்கள் வாங்கும் தகுதிகேற்ப மின் கட்டணம் என்ற முழுக்கத்தை கடைபிடிக்க முடிவெடுத்தார்கள்.

இந்திய மின்துறை வளர்ச்சி 1326

மெகாவாட்டில் மின் உற்பத்தி துவங்கி, இன்றைக்கு 3,76,000 மெகாவாட் மின் உற்பத்தி என்ற இலக்கை அடைந்துள்ளது.

நவதாராளவாத ஆட்சியானது உள்நாட்டு மற்றும் வெளி நாட்டில் லாபவெறி பெருநிறுவன மற்றும் வணிக சமூகத்திற்கு ஆரதவாக அரசின் தலையீட்டை ஊக்குவிக்கிறது. நாட்டின் மின் உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள நிலக்கரி, நீர், எரிவாயூ போன்ற இயற்கை வளங்களை இந்திய, கார்ப்பரேட் முதலாளிக்கு சூறையாட வழிவகுத்துள்ளது.

மின்சார சட்டம் 2003, மின்சார வணிகத்தில் ஒரு முன்னேடியை திறந்துள்ளது. இதற்கு முதலீடு தேவையில்லை, இது வர்த்தகம் என அழைக்கப்பட்டுள்ளது. இதற்கு தலைமுறை ஆலைகளோ, பரிமாற்றம், மற்றும் விநியோகம் வலை அமைப்புகளே தேவையில்லை. கணினி நெட் ஒர்க்கை கொண்ட எந்த ஒரு நபரும் மின்சாரத்தை வாங்குவது மற்றும் விற்பது போன்ற வணிகத்தில் ஈடுபட முடியும்.

வேளாண் மின் இணைப்புகளுக்கு சிலமாநிலங்களில் (தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா, பஞ்சாப், கர்நாடகா) முற்றிலும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவது நிறுத்தப்படும். அதே போல குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் மற்றும் தற்போது வீடுகளுக்கு வழங்கும் 100 யூனிட், கைத்தறி நெசவு போன்றவற்றிற்கு வழங்கி வரும் மானியம் ஆகியவைகள் கேள்விக்குறியாக மாறும். இலவச வழங்குவதற்கான மானியம். மாநில அரசுகள் தானே வழங்குகிறது. இதை ஏன் தடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு, இந்த சட்டதிருத்தத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்து என்னவென்றால் மாநில அரசுகள் மானியம் கொடுப்பதற்கு தடையில்லை. ஆனால் அது கட்டணத்தில் அல்ல. குறிப்பிட்ட தொகையை விவசாயிகளின் கணக்கில் நேரடியாக செலுத்த வேண்டும். ஏற்கனவே கேஸ் மானியம், வழங்கியது என்ன நிலை என்று நமக்கு தெரியும்.

ஒட்டு மொத்த மின் விநியோகத்தை ஒரு தனியார் என்பதற்கு மாறாக ஊருக்கு ஒருவர், தெருவுக்கு ஒருவர் என்ற நிலை உருவாகும். (கேபிள் டிவி ஊருக்கு ஒருவர் இருப்பது போல)

**குறுக்கு மானியம்**

சுதந்திரத்திற்குப்பின் மின்சாரக் கொள்கை ஏழைகளுக்கு மின்சாரத்தை உறுதி செய்வதற்காக குறுக்கு மானியத்தை அறிமுகப்படுத்தியது. அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவபர்களுக்கு உண்மையான விநியோகச்செலவை காட்டிலும் கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை ஏழைகளுக்கு குறைந்த விலையில் மின்சாரம் வழங்க பயன்படுத்தப் பட்டது. எடுத்துக்காட்டாக ஒரு யூனிட்டுக்கு சராசரி சப்ளை செலவு 1 ரூபாயாக இருந்தால் ஒரு யூனிட்டுக்கு 1.40 அதிகமாக வசூலிக்கப்பட்டது மற்றும் ஒரு யூனிட்டுக்கு 80 பைசா செலுத்த வேண்டிய ஏழைகளுக்கு மானியமாக 40 பைசா பயன்படுத்தப்பட்டது. மின்சார சட்டம் 2003 கிராமப்புற மின்மயமாக்கல் மற்றும் குறுக்கு மானியத்தை ரத்து செய்யும் பொறுப்பில் இருந்து இந்திய அரசாங்கம் கைகளை கழுவ வேண்டும் என்று பரிந்துறைத்தது. இதனால் ஏழை மற்றும் கிராமப்புற மக்கள் அனுபவித்து வரும் மின்சாரத்தின் கட்டணம் உயரும்.

**மின்சார சட்ட திருத்த மசோதா 2021**

மின்நுகர்வோரை தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் வஞ்சித்து கொள்ளையடிக்கும் அந்த பின்னணியில் தான் பாஜக தலைமையிலான அரசு, வணிக சமூகம் அதிக லாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பை மேலும் விரிவுப்படுத்த முயலுகிறது. இந்த நோக்கத்தோடு தான் மின்சார சட்டத்திருத்த மசோதா, வரைவு செய்யப்பட்டுள்ளது. இந்த வரைவு ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஏதேனும் குறிப்பிட்ட பகுதியின் மின் விநியோகத்தில் ஈடுபடலாம். இந்த வணிகத்தை தொடங்குவதற்கு ஒரு பைசா கூட முதலீடு செய்யத்தேவையில்லை. பெரிய தொழில்கள், வணிக நிறுவனங்கள், இரயில்வே போன்ற வற்றிக்கு மின்சாரம் விற்பனை செய்வது போல தனித்தனி இலாபகரமான பிரிவுகள் வழங்கப்படும்.

கிராமப்புற வீடுகள் விவசாயிகளுக்கு வழங்கும் மின்சாரம் நஷ்டம் விளைவிக்கும் பிரிவாக கருதி பொதுத்துறையை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இதனால் நுகர்வோரை தேர்ந்தெடுக்கின்ற உரிமை பெருநிறுனவங்களுக்கு வழங்கப்பட்ட

காரணத்தினால் அதிக பயன்பாடு செய்யும் மின் நுகர்வோரை கார்ப்பரேட் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கும் இதனால் மின்சாரம் சாமான்ய மக்களுக்கு எட்டாக்கனியாக மாறிவிடும்.

இந்தியாவில் மகராஷ்ட்ராவில் என்ரான், ஒடிஸ்ஸாவில் AEC கம்பெனியும் மின் விநியோகத்தில் ஈடுபட்டு மக்களிடம் அதிக கட்டணத்தை வசூலித்து வந்தது. இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டபொழுது மின் விநியோகத்தை சரிசெய்வதற்கு அதிக தொகை கோரி வெளியேறினார்கள். மாநில மின்வாரிய ஊழியர்கள் தான் சரி செய்தனர்.

**பறிபோகும் மாநிலஅரசின் உரிமை**

மின் கட்டணத்தை நிர்ணம் செய்கின்ற உரிமையையும், மின் கட்டணத்தை உயர்த்து கின்ற உரிமையும் மாநில மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தை நிர்வகிப்பதில் உள்ள உரிமைகளை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. மாநில ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தலைவரை நியமிக்காத போது பக்கத்து மாநில ஒழுங்குமுறை ஆணையத் தலைவர் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். மாநில நிர்வாகத்தில் பக்கத்து மாநில அதிகாரி தலையிடுவது எப்படி சரியாகும்.

அரசியல் அமைப்பு சட்டத்தின் 7வது அட்டவணையின் கீழ் பிரிவு 226 வழங்கியுள்ள மாநிலங்கள் சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரத்தை மீறுவதாகும்.

**மின்வாரிய ஊழியர்களின் நிலை**

தனியார் மயமாக்களின் விளைவாக மின்சாரச் செலவு அதிகரித்துள்ள நிலையில் மின்வாரிய தொழிலாளர்கள் உழைப்பு சுரண்டலுக்கு ஆளாகி உள்ளனர். நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. கேஷிவல், அவுட்சோர்ஸ், மற்றும் கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தொழிலாளர்களின் ஊதியம் தேக்க நிலையில் உள்ளது.

குறைந்த கூலியும் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் பணியில் அமர்த்தப்படுகின்றனர். மின்துறையில் ஒப்பந்தம் மற்றும் சாதாரண தொழிலாளர்கள் பலியாவதுடன் மரண விபத்துக்களும் தினசரி நிகழ்வாகி விட்டன. மாநில மின்வாரியத்தில் உள்ள நிரந்தர தொழிலாளர்கள் தனியார் நிறுவனங்களின் கீழ் பணியாற்றுகின்ற நிலையோடு அவர்களின் பணித்தன்மை, சமூகப்பாதுகாப்பு, ஆகியவை கேள்விக்குறியாக மாறிவிடும்.

**நிறைவாக**

ஒன்றிய பிஜே.பி. அரசின் கொள்கைக் கெதிராக நாடு முழுவதும் மின் ஊழியர்கள் போராடி வருகின்றனர். ஒருங்கிணைந்த போராட்டங்களின் மூலமாக உத்திரபிரதேசம், ஹரியான, ஜம்மு-காஷ்மீர் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட பல மாநிலங்களில் தனியார் மயமாக்கலை தடுத்து நிறுத்த முடிந்தது. மேலும் சம்யுக்தா கிசான் மோர்ச் தனது கோரிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கி வேளாண் சட்டங்களை திரும்பபெறுகின்ற கோரிக் கையோடு போராடியது. இப்போராட்டங் களால் தான் மின்சார சட்டத்திருத்த மசோதா நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போனது.

இந்த சட்டத்தை திரும்பபெற மின் ஊழியர்களின் போராட்டம் மட்டும் போதாது. இதர தொழிலாளிகள், விவசாயிகள், மின்நுகர்வோர்கள், என்ற பரந்த ஒன்றுப்பட்ட போராட்டம் அவசியம். எனவே மார்ச் 28,29 -ல் வேலை நிறுத்தம் செய்வோம்.

மின்துறை உள்ளிட்ட
பொதுத் துறைகளை பாதுகாப்போம்!
அனைவருக்கும் மின்சாரம்!
மக்கள் வாங்கும் விலையில் மின்சாரம்!
என்ற கோஷத்தை முன்னெடுத்து செய்வோம்.





# புதிய பாதையில் தமிழ்நாடு மின்சாரவாரியம்!

கொரானா பெருந்தொற்று மூன்றாவது அலை முடியும் தருவாயில் தமிழக அரசு இயல்பு நிலைக்கு திரும்பி இருக்கிறது. தமிழக நிதிதுறை அமைச்சர் மற்றும் பொருளாதார வல்லுநர் குழு இணைந்து தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களை சீரமைப்பது தொடர்பாக பல வழிகாட்டுதலை வழங்கி வருகின்றனர். அதில் மிக முக்கியமாக போக்குவரத்தும், மின்சாரதுறையும் நட்டத்தை குறைப்பது. பிறகு இலாபத்தை நோக்கி பயணிப்பது என்ற அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மின்சார வாரியம் ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் கோடி நட்டத்தை சந்தித்தும் வரும் நிலையில் மின்வாரியத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொழிற்சங்கங்களின் மத்தியில் ஊழியர்களின் மத்தியில் மிகுந்த மனகசப்பை ஏற்படுத்தி வருகிறது.

புதிய பதவிகளை அனுமதிக்காமல் 63-க்கும் மேற்பட்ட பிரிவு அலுவலகங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட துணை மின் நிலையங்களில் அனுமதிக்கப்படாமல் உள்ளது. அந்த துணை மின் நிலையங்களில் ஏற்கனவே கூடுதல் பணிச்சுமையுடன் வேலை செய்யும் களப்பனி ஊழியர்களை பயன்படுத்துவது, பிரிவு அலுவலகங்களுக்கு ஏற்கனவே உள்ள AE-க்களை கூடுதல் பொறுப்பு அளித்து பயன்படுத்துவது என்ற நிலை தொடர்கிறது. மின்வாரியத்தில் 50,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்பாமல் ஏற்கனவே உள்ள ஊழியர்களை, பொறியாளர்களை Rediployment என்ற முறையில் பயன் படுத்துவது, பல இடங்களில் அனுமதிக்கப் பட்ட பதவிகளை ரத்து செய்வது தொடர் கதையாக உள்ளது. இது தொடர்பாக தொழிற்சங்கங்களை அழைத்து கலந்து ஆலோசனை செய்யாமல் தன்னிச்சையாக உத்திரவுகள் பிறப்பிப்பது. ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மின்வாரியத்தின் நட்டத்திற்கு காரணமாக முக்கிய அம்சங்களாக இருப்பது கூடுதல் விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதும், நிலக்கரி மற்றும் தரமற்ற தளவாட பொருட்களை வாங்குவதும் ஆகிய மூன்றை சரி செய்தாலே மின்சார வாரியம் நட்டத்திலிருந்து மீண்டு இலாபத்தை நோக்கி பயணிக்கும். இதில் மின்சார வாரியமும், அரசும் கவனம் செலுத்தாமல் ஊழியர்களை குறைப்பது, அனுமதிக்கப்பட்ட பதவிகளை

ரத்து செய்வது, புதிய பதவிகளுக்கான அனுமதி வழங்க மறுப்பது, இவற்றால் எந்த முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. மின்சார வாரியத்தின் நிதி ஒழுகல் என்பது பல்வேறு மாவட்டங்களில் நடக்கிறது. குறிப்பாக விவசாய மின் இணைப்புகளுக்கான மான்ய தொகை வழங்குவதில் மின்சார பயன்பாட்டிற்கும், மானிய தொகைக்கும் நீண்ட இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை சரிசெய்தாலே தமிழக அரசு மின்சார வாரியத்திற்கு பலநூறு கோடிகள் மாதமொன்றுக்கு அரசு தர வேண்டியது வரும். அதே போல ஒப்பந்ததாரர் களுக்கு, தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு மின்சார சட்டம் 2003-ன் அடிப்படையில், சட்ட திட்டங்களின் அடிப்படையில், மின்கொள் முதலுக்கான தொகை வழங்கப்படுகின்றதா? என்பதை துள்ளியமாக ஆய்வு செய்தாலே மேலும் பலநூறு கோடி ரூபாய் வரை நாம் சேமிக்க முடியும்.

புதிய மின் திட்டங்கள் தொடர்வதற்கு (அனல் மின் நிலையங்கள்) பல ஆயிரம் கோடிகள் முதலீடு செய்து திட்ட பணிகள் நடந்து வரும் சூழ்நிலையில் சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமலும், பல்வேறு காரணங்களால் திட்டங்கள் காலதாமதம் ஆவதும் சில திட்டங்கள் இடையே நிற்பதும் தொடர்கதையாக உள்ளது. இதனால் திட்டமதிப்பீடு கூடுதலாவது மட்டுமின்றி காலதாமதத்தின் காரணமாக ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை சந்தை மதிப்பை விட கூடுதலாகி மேலும் நட்டத்தை ஏற்படுத்துகிறது. இதனால் இதைவிட குறைவான விலையில் மின்சாரத்தை தனியாரிடம் இருந்து வாங்குகின்றோம் என்று வாரியமும், அரசும் சொல்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். மேலும் அனல் மின் நிலையங்களுக்கு மாறாக நீர் மின்சக்தி, சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை, கடல் நடுவே நீர் தேக்கங்கள் நடுவே காற்றாலை அமைப்பது போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்த முதலீடு செய்வது மிக்க பயனுள்ளதாக அமையும். கூடுதலாக இதில் காற்று மாசுபடுதல், சமூகம் மாசுபடுதல் என்ற பெரிய குற்றம் தவிர்க்கப்படுகிறது. இதில் நிர்வாகமும், அரசும் கவனம் செலுத்துமானால் மிகப்பெரிய மாற்றத்தை, ஏற்படுத்த முடியும். நட்டத்தை தவிர்த்து இலாபத்தை நோக்கி மிக விரைவில் மின்சார வாரியம் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தின் இயற்கை வளங்களான காடுகள், நீர்த்தேக்கங்கள், கடல்சார் பரப்புகள் ஆகியவற்றை மேலைநாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதனால் மின்வாரியம் இலாபத்தை நோக்கி பயணிக்கும்.

இவ்வாறு தொழில் நுட்பம் சார்ந்த விஷயங்களில் கவனம் செலுத்தாமல் மின்வாரிய ஊழியர்கள் குறைப்பு, அனைத்து பணிகளும் அவுட்சோர்சிங், பணி ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணி செய்ய வைப்பது, 58 வயதை கடந்தவர்களுக்கு மீண்டும் இரண்டு ஆண்டுகள் பணி நீட்டிப்பு செய்து பணி செய்ய வைப்பது, இவற்றின் மூலம் மின்வாரியம் எந்த நட்டத்தையும் குறைக்க முடியாது. ஊழியர்களுக்கு கொடுக்கும் சம்பளமும், பென்சனும் செலவினமாக கருதாமல் உற்பத்திக்கான மூலதனம் என்று கருதுகிற பொழுது அதை நிர்வாகம் உணருகின்ற பொழுது, மின்வாரியத்தில் எண்ணற்ற மாற்றங்களை செய்துவிட முடியும். ஏனெனில் மின்வாரியத்தின் வளர்ச்சிக்கு, மேன்மைக்கு இரவு, பகல் பாராமல் உழைக்கின்றவர்கள் மின்வாரிய ஊழியர்களும், பொறியாளர்களும், அதிகாரிகளும் என்றால் மிகையாகாது. மின்வாரியம் தொழிற்சங்கங்களை கலந்து ஆலோசனை செய்யுமானால் எண்ணற்ற ஆலோசனைகளை சங்கங்கள் வழங்க தயாராக உள்ளது.

ஆலோசனைகள் கேட்பதற்கு பதிலாக மின்வாரிய வட்டங்களை மாவட்டங்களின் எல்லைகளாக நிர்ணயிப்பது. அதற்கேற்றார் போல் கோட்டங்களையும், வட்டங்களையும் எல்லைகளை மாற்றி அமைப்பது போன்ற நடவடிக்கைகளால் மின்வாரியத்திற்கு எந்த

பொருளாதார சிக்கனமும் ஏற்பட போவதில்லை. மாறாக செலவினங்களே ஏற்பட போகிறது. இன்னும் கூடுதலாகச் சொல்லப் போனால் கோட்டங்களின் எல்லைகள் மாறிடும் போதும், குறிப்பாக களப்பணி ஊழியர்களின் பணி இடம் மாறும் என்ற நிலைவரும் போது எண்ணற்ற நீதிமன்ற வழக்குகளை எதிர்காலத்தில் மின்வாரியம் சந்திக்கவிருக்கின்றது என்ற நடைமுறை பிரச்சனைகளும் உள்ளது என்பதை மின்வாரிய நிர்வாகமும், தமிழக அரசும் உணருமா என்று தெரியாது.

மாற்றங்களே நிலையானது. மாற்றங்களை தவிர்க்க முடியாது, நவீன விஞ்ஞானத்தையும் தவிர்க்க முடியாது என்ற நிரூபிக்கப்பட்ட உண்மைகள் இருந்தாலும் அவை நடைமுறைக்கு கொண்டு வருகின்ற பொழுது அமலாக்கம் செய்யப்படும் இடத்தில் உள்ள தொழிலாளர்களை, தொழிற்சங்கங்களை, மக்களை கலந்து ஆலோசனை செய்யாமல் நடைமுறைக்கு வருமானால் அங்கு போராட்டங்கள் தவிர்க்க முடியாததாக மாறிவிடுகிறது. மின்வாரியத்தின் நன்மை கருதி, மக்களின் நன்மை கருதி வாரியம் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் பிறகே அமலாக்கம் செய்திட வேண்டும் என்பதே நமது விருப்பமாக உள்ளது. நிர்வாகம் செவிசாய்க்கும் என்று நம்புகின்றோம்.

- தி. ஜெய்சங்கர்

## 1.12.2019-க்கு பின் ஏழாம் ஊதிய பாகுபாடு விண்ணப்பங்களின் மீது நடவடிககை எடுக்க தற்காலிகமாக நிறுத்தி வைக்க வாரிய உத்திரவு

AUDIT BRANCH
12 FEB 2022
TANGEDCO, CHENNAI-2

004936
336

TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED
TANGEDCO

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI
CHENNAI-2.

**Memo. No. 4539/A4/A42/2022-1, dated 05-02-2022.**

Sub: TANGEDCO – Establishment – Rectification of pay anomaly arising on and after 01-12-2019 – Scrutinization of pay anomaly proposals – Instructions – Issued.

-----

It is informed that the Wage Revision 2019 has not been implemented till date. In the event of Wage Revision given retrospective effect from 01-12-2019, the pay of the senior and the junior would be modified and it would nullify any such anomaly that exist now. Hence, the rectification of pay anomaly arising on and after 01-12-2019 could only be examined, after necessary orders are issued for the revised level of pay.

2. All the Chief Engineers/Superintending Engineers and other Head of Departments/ Officers of TANGEDCO and TANTRANSCO are therefore hereby instructed that the pay anomaly proposals arising on and after 01-12-2019 be withheld and submitted after implementation of the Wage Revision 2019, if required.

**A.MANIKKANNAN,**
**SECRETARY.**




# சமூக பாதுகாப்புகளை இல்லாமல் செய்வது தான் அரசுகளின் வேலையா?

**- தி. ஜெயசங்கர்**

தமிகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காக காத்திப்போர் எண்ணிக்கை 67 லட்சம்,பதிவு செய்யாமல் காத்திருப்போர் எண்ணிக்கை பல லட்சம். அதே போல இந்திய அளவில் பல கோடிகளை தாண்டும். சுதந்திர இந்தியாவில் கனரக தொழில்களை துவங்குவது, அனைவருக்கும், கல்வி, வேலை, சுகாதாரம், மின்சாரம், விவசாயத்தில் பசுமை புரட்சி, வறுமை ஒழிப்பு என பல முக்கிய இலக்குகளை முன்வைத்து முன்னேற வழி அமைத்தது. ஆனால் இன்று சுதந்திரம்அடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்பும் கல்வி, வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் இலக்கை அடைய முடியவில்லை. முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இதில் முழுக்க முழுக்க தோல்வி கண்டனர்.

1917 ரஷ்யப்புரட்சிக்கு பின்பு தொழிலாளி வர்க்கம் முதல் முறையாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.ஜார் மன்னனை நாட்டை விட்டு வெளியேற்றியது. தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியில் தான் 8மணி நேர வேலை, கூட்டுறவு சங்கங்கள்,அரசு வங்கிகள், தொழிலாளிகளுக்கு போனஸ், பெண்களுக்கு வாக்குரிமை, வேலை, அரசு பள்ளிகள், அரசு தொழிற்சாலைகள், அரசு மருத்துவமனைகள், ஓய்வூதியப்பலன்கள்,மற்றும் சமூகப்பாதுகாப்பு கொண்ட சலுகைளை தொழிலாளி வர்க்க அரசு கொடுத்தது. ருஷ்யாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், ஆட்சி மாற்றத்தால் ஏற்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள், ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட ஆங்கிலம் பேசுகின்ற நாடுகளில் காட்டுத்தியாய் பரவியது. இதன் தாக்கத்தால் அங்கும் ரஷ்யாவின் தொழிலாளி வர்க்க ஆட்சி என்ன நடைமுறைப்படுத்துகின்றதோ அதே போன்று அவர்களும் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. உலகம் முழுவதுமுள்ள நாடுகள் சோசலிச அரசின், தொழிலாளி வர்க்க அரசின் வளர்ச்சியைக் கண்டு மிரண்டு போனது. அமெரிக்க வல்லரசு 30 ஆண்டுகளில் எட்டிய அரசை கோசலிச அரசு 5 ஆண்டுகளில் எட்டியது. தொழிலாளிகளின் சமூகப்பாதுகாப்பு என்பது உலகம் முழுவதும் உரிமை முழக்கமாகப் பேசப்படுவதற்கு லெனின் தலைமையிலான ரஷ்யாவின் சோசலிச அரசு என்று பலருக்கு தெரியாது.

இன்று வளர்ந்த வல்லரசு நாடுகளில் கூட ஓய்வூதிய பலன்கள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு கொண்ட பலன்களை தர இயலாது என்று அரசு சொல்லுகின்ற போதெல்லாம் தொழிலாளி வர்க்கம் போர் கொடித்தூக்கி சலுகையை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இன்று அரசு துறைகளை தனியார் மயமாக்க வேண்டுமென்று ஒன்றிய அரசு துடியாய் துடிக்கிறது. பொதுத்துறைகளை தனியாருக்கு கொடுக்க வேண்டுமென்பதற்கான காரணங்கள் பொதுத்துறையில் உள்ள ஊழியர்களுக்கு சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை அமல்படுத்த போதிய நிதி இல்லை என்று ஒன்றிய அரசு சொல்கிறது. பொதுத்துறைகள் இலாபத்தில் இயங்கினாலும், நட்டத்தில் இயங்கினாலும் தனியாருக்கு கொடுக்க வேண்டுமென்று அரசு சொல்கிறது. இதன் நோக்கம் தொழிலாளிகள் சமூக

பாதுகாப்பு அற்றவர்களாக மாற்றி உதிரி தொழிலாளியாக கொண்டு வந்து வறுமையின் பிடியில் சிக்க வைக்கும் நோக்கம் கொண்டது. இன்னொருபுறம் சமூகநீதி கோட்பாடுகளை ஒழித்துக்கட்டுவதும் இதன் நோக்கமாகும். இதற்கு பல விதமான நியாயங் களை கற்பிக்கிறது. பா.ஜ.கவின் ஒன்றிய அரசு.

மேலை நாடுகளில் திறமையின் அடிப்படையில் தான் பணி வழங்கப்படுகின்றது. அங்கு கோட்டா முறை இல்லை, அனைவரையும் சமமாக கருதுகின்றது அரசு என்று நியாயம் கற்பிக்க முயல்கிறது. வளர்ந்த நாடுகளையும் நம் நாட்டையும் இவ்வாறு ஒப்பீடு செய்வதே தவறு, கல்லாமையும்,இல்லாமையும் நிறைந்த இந்தியாவை வளர்ந்த நாடுகளோடு ஒப்பீடு செய்வது திட்டமிட்டு முதலாளிகளின் பக்கம் அரசு செல்வதையே நமக்கு உணர்த்துகின்றது. இந்திய நாடு வேற்றுமையில் ஒற்றுமை கட்டி அமைதியாக வாழும் நாடு. இங்கு உலகில் இல்லாத அளவிற்கு ஜாதியம் வேரூன்றி உள்ளது. சமூகத்தில் இன்றும் வளர முடியாத குலத்தொழிலை செய்து வறுமையின் பிடியில் சிக்கி மேலே வர முடியாத கோடிக்கணக்கான மக்கள் வாழும் தேசமிது. பணக்காரர் முதல் பரம ஏழை வரை ஜாதியத்தை தூக்கி பிடித்து வாக்களிக்கும் தேசமிது. வட இந்தியாவில் பலமாநிலங்களில் பிற்படுத்தப் பட்டவர்கள் உயர்ஜாதியினர் தெருக்களில் நடக்க முடியாத நிலை இன்றும் தொடர்கின்றது. இதையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் அனைவரும் ஒரே வரிசையில் நிற்க வைத்து ஓட வேண்டும் என்று சொன்னால் அதற்கு பெயர் அநீதி அல்லவா. அதைத்தான் பாஜகவின் ஒன்றிய அரசு முன்வைக்கிறது.

ஒன்றிய அரசை ஒவ்வொரு முறையும் முதலாளிகளால் உருவாக்கப்படுகின்றது. இந்திய பெருமுதலாளிகள் 30 ஆண்டுகளுக்கு முன்பாக யாரை கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்தார்கள். இப்போது யார் வரவேண்டும் என்பதோடு, தானும் அந்த அரசில் பங்கு பெறும் அளவிற்கு முதலாளித்துவ அரசு மாற்றம் அடைந்துள்ளது. தற்போது நேரடியாக பங்கு பெறுவதால் முதலாளித்துவம் என்பது உலகமயத்தை உள்வாங்கி கொண்டதால் அது கார்ப்பரேட் முதலாளித்துவமாக மாறி வருகின்றது. அரசுத்துறைகளை தனியார் மயமாக்கினால் பெருமுதலாளிகள் வளம் பெறுவது மட்டுமல்ல சமூக பாதுகாப்பு கோட்பாடுகள், சமூக நீதி கோட்பாடுகளை முதலாளித்துவ அரசுகள் கைவிடுகின்றது. இதை எதிர்த்து போராடும் தொழிலாளி வர்க்கத்தை தனியார் துறை ஊழியர்களை வைத்தும், பொது மக்களை வைத்தும் நமக்கு எதிராக ஊடகங்களில் விவாத பொருளாக்கி பொய்யான கருத்தியலை மக்களிடம் கொண்டு சேர்க்கின்றது ஒன்றிய பாஜ அரசு. இதை எதிர்த்து பொதுத்துறை ஊழியர்கள் அனைவரும் ஓரணியில் இணைந்து வீதியில் இறங்கி போராட மாட்டார்கள் என்ற எண்ணம் ஒன்றிய அரசுக்கு வலுவாக உள்ளது.

நம்மை பொறுத்தவரை முறைசாரா ஊழியருக்கும், சமூக பாதுகாப்பு அரசு தரவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றோம். ஏழைகள் இல்லாத, வறுமை இல்லாத இந்தியாவை உருவாக்குவதே நமது லட்சியமாக உள்ளது. இந்த லட்சியத்தை எட்ட முதலாளித்துவ கொள்கை தடையாக இருந்தது. இப்போது அதைவிட கூடுதலாக கார்ப்பரேட் முதலாளித்துவம் தடையாக உள்ளது. ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் கல்வி, வேலை அளிப்பதோடு சமூக பாதுகாப்பை அளிப்பது அரசின் கடமை யாகும். அந்த கடமையை அரசு செய்ய தாயாராக இல்லை என்பது மட்டுமல்ல மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசு மக்களுக்கு எதிராகவும், கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாகவும் செயல் படுவதாக உள்ளது. அதை பாஜக ஒன்றிய அரசு மறுக்காமல் பொதுத்துறைகளை தனியாருக்கு விட வேகமாக செயல்படுகின்றது.

இதையெல்லாம் முறியடிக்க, மின்துறை உள்ளிட்ட பொதுத்துறைகளை பாதுகாப்பதன் மூலமே சமூக பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். பென்சன் உள்ளிட்ட இன்னபிற சலுகைகளையும் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்பது அனை வரும் அறிந்த உண்மை,. பொதுத் துறைகளை பாதுகாக்கும் போராட்டம் தீவிரமடைந் துள்ள நிலை யில் தொழிலாளி வர்க்கம் இன்னும் வலிமையாக குடும்பத்தோடு தெருவில் இறங்கி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டடுள்ளோம். மின்துறை உள்ளிட்ட பொதுத் துறைகளை பாது காப்பது என்பது சமூக பாதுகாப்பு மட்டுமல்ல இதுவும் ஒரு வகையில் இரண்டாவது சுதந்திர போராட்டமே.

போராடுவோம்... பொதுத்துறைகளை
பாதுகாப்போம்......



# பெண்களுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், அங்கீகரிக்கவும், களமிறங்கும் சர்வதேச பெண்கள் தினம்..!

சர்வதேச பெண்கள் தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் -8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஆனால் அது கெண்டாட்ட தினமல்ல பெண்களுக்காக போராடியவர்களின் வீர வரலாற்றை நினைவுகூறும் நாளாகும்.

பெண்கள் தினம் என்பது அலுவலகங்களிலும், பொது இடங்களலும் கோலப்போட்டி, அழகிப்பேட்டி, சமையல் போட்டி என்று சம்பிரதாய தினமாக மாறிவிட்டது.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஆடைதயாரிப்பு, பஞ்சாலை போன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்த பெண்கள் சுதந்திரம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து போர்க்கொடி உயர்த்தினர்.

ஆண்களுக்கு நிகராக உரிமைகள் வேண்டும், வேலை வேணடும், வேலைக்கு ஏற்ற கூலி வேண்டும், 8 மணி நேர வேலை வேண்டும், வாக்குரிமை வேண்டும், ஆண்களுக்கு இணையான கூலி வேண்டும், ஓய்வு வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் வீதியில் போராடினார்கள்.

1910-ம் ஆண்டு 17 நாடுகளில் இருந்து பெண்கள் கலந்து கொண்ட பெண்கள் மாநாட்டில் பெண்களின் கோரிக்கை வென்ற தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக கடைபிடிக்கும் தீர்மானத்தை தோழர். கிளாரா ஜெட்கின் முன்மொழிந்தார் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டனர்.

போராடினால் தான் உரிமை கிடைக்கும் என்ற சிந்தனை மேலோங்கியது. பலகட்ட போராட்டங்களுக்குப் பிறகு இன்று கல்வி, வேலை வாய்ப்பில் சற்று முன்னேற்றம் இருந்தாலும் அது போதுமானதாக இல்லை.

உலக மயமாக்கல் பெண்களின் வேலை வாய்ப்பை தடுக்கிறது, உழைப்பு சுரண்டல் நடைபெறுகிறது. இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிட்டது, பெண்களின் கண்ணியம், சுயமரியாதை, விடுதலை மறுக்கப்படுகிறது. பெண்களின், அடிப்படை உரிமைகளான உணவு, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, சொத்துரிமை, குடும்ப வன்முறை போன்ற உரிமைகளுக்கு போராட வேண்டியுள்ளது.

இந்த ஆண்டு சர்வதேச பெண்கள் தினம் அகில இந்திய வேலை நிறுத்தமான மார்ச் 28,29 என்பதை நோக்கியே நகர்கிறது, அதற்கான பிரச்சாரம் மற்றும் தயாரிப்பு பணிகளுக்கு மத்தியில் மார்ச் 8 பெண்கள் தினம் வருகிறது.

கொரோனா எனும் நோய்தொற்றால் பெண்களின் வேலை இழப்பு, வேலையின்மை மோசமாகியுள்ளது. சம்பள வெட்டு, சம்பள இழப்பு ஆகிய காரணங்களால் வறுமை அதிகரித்துள்ளது. இந்நிலமை பெண்களை மிகவும் பாதித்துள்ளது, 2020ம் ஆண்டு மார்ச்சில் இருந்து டிசம்பர் வரை பெண் தொழிலாளர்கள் 47சதம் வேலை இழந்துள்ளனர், ஆண் தொழிலாளர்கள் 7சதம்

மட்டுமே வேலை இழந்துள்ளனர். பெண் உழைப்பாளிகள் ஒட்டுமொத்த உழைப்பு சக்தி என்பது 16.1 சதம் குறைந்துவிட்டது. அதிகம் பாதிக்கப்பட்டது தினக்கூலி தொழிலாளர்கள்தான். மத்திய பிஜேபி அரசு கிராமப்புற வேலை வாய்ப்பிற்கான பட்ஜெட்டை 98 ஆயிரம் கோடியில் இருந்து 73 ஆயிரம் கோடியாக குறைதுவிட்டது, சென்ற ஆண்டைவிட இந்த ஒதுக்கீடு 40 சதம் குறைவு,

பல மாநிலங்களில் 6 மாதங்களாக கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் பணி செய்பவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. 98சதம் வீட்டுவேலைசெய்யும் தொழிலாளர்கள் இந்த காலகட்டத்தில் வேலை இழந்துள்ளனர்.

ஆண், பெண் ஊதியம் வித்தியாசம் அதிகரித்துள்ளது அதாவது 35சதம் இருந்து 50 சதம் வித்தியாசம் உள்ளது.

உடல்நலம், ஆரோக்கியம், சுகாதாரம், உணவு பாதுகாப்பு போன்றவற்றிகான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். உலகையே அச்சுறுத்திய கொரோனா நோய் பரவலால் மிகமோசமான பாதிப்புக்கு உள்ளான பெண் தொழிலாளர்களை இந்த பாதிப்புகளிலிருந்து களைவதற்கான முயற்சிகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்கவேண்டும், அதை நோக்கியே நமது சர்வதேச பெண்கள் தினம் அமையட்டும்.

**<u>கோரிக்கைகள்:</u>**

« வேலையில்லா திண்டாட்டத்தை சரிசெய்ய பெண்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு திட்டத்தை உருவாக்குவது.

« மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கு நிதி அதிகரித்து, ஒதுக்கீடு செய்வது, 200 நட்கள் வேலை கிடைப்பதையும, தினக்கூலி 600ஆக உயர்த்தி நகர்புறங்களுக்கும் விரிவுபடுத்த செய்வது,

« அடிப்படை, சேவை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவு;ம, அங்கன்வாடி, ஆஷா, மதியஉணவுப் பணயாளர்கள் மற்றும் இதர திட்டப் பயீணயளர்களை முறைப்படுத்துதல் மற்றும் ஐஎல்சி - பரிந்துரைப்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூக பாதுகப்பை உறுதிப்படுத்துவது.

« விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும், சமையல் எரிவாயு மற்றும் இதர பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை திரும்ப பெற வேண்டும், அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் ரேஷனில் இலவசமாக வழங்க வேண்டும், வரி செலுத்தாத அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் ரூ.7500 வருமானத்தை உறுதி செய்ய வேண்டும்,

« பெண்களின் உழைப்பை தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளாக அங்கீகரித்தல், பெண்களின் ஊதியமில்லா வேலை, குறைவான ஊதியம் ஆகியவற்றை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இணைப்பது.

« அனைத்து துறைகளிலும் உள்ள பெண்களுக்கு சமவேலைக்கு சமஊதியமும், பணிபுரியும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு மற்றும் சலுகைகளை உறுதி செய்தல்,

« பெண்களின் நில உரிமையை உறுதி செய்வதற்கான வன உரிமைச்சட்டம் உட்பட கூட்டுப் பட்டாக்களுக்கான அனைத்து சட்டங்களும் திருத்தம் செய்தல், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு சிறப்பு முன்னுரிமை விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களிலும் பெண் விவசாயிகளை சேர்ப்பது,

« அனைத்து பணியிடங்களிலும் போக்சோ சட்டத்தை கடுமையாக அமல்படுத்தல்,

« பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தடுத்திட நீதிபதி வர்மா கமிட்டியின் பரிந்துறைகளை நிறைவேற்றுதல்,

« தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து அமைப்புகளிலும் 33சதம் இட ஒதுக்கீட்டை விரைவில் அமலாக்க சட்டம் இயற்ற வேண்டும்.

« தொழிலாளர் நல சட்டங்களை சட்ட தொகுப்புகளாக மாற்றியதை திரும்ப பெறவேண்டும்,

« பொதுத்துறைகளை தனியார் மயமாக்கப் படுவதை நிறுத்த வேண்டும்,

« அனைவருக்கும் தரமான பொது சுகாதார சேவைகளை உறுதி செய்யவேண்டும்,

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்,**
**செம்மை மாதர் திறம்புவதில்லையாம்!**
**என்ற பாரதியின் வரிகளை மனதில் நிறுத்தி**
**சர்வதேச பெண்கள் தினத்தில் சங்கமிப்போம்,**

- தஞ்சை தனலட்சுமி

★ 3 ஆண்டுகளுக்கு முன்பு பட்டியல் பெறப்பட்டு நிலுவையில் உள்ள பகுதி நேர பணியாளருக்கு நியமன உத்திரவு வழங்கிடுக.

★ கடந்த 10 ஆண்டுகளாக பகுதி நேர பணியை செய்து வருபவர்களின் பட்டியலை கேட்டு பெற்று நியமன உத்திரவு வழங்கிடுக

★ பகுதி நேரமாக பணியாற்றி வரும் பணியாளர்களை முழுநேர பணியாளர்களாக மாற்றிடுக

★ தகுதியுள்ள பகுதி நேர பணியாளர்களுக்கு உள்முக தேர்வின் மூலம் பதவி மாற்றம் வழங்கிடுக



# மின்வாரிய பகுதி நேர பணியாளர்களின் மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம்

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற நூற்றுக்கணக்கான பகுதிநேர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர பணியாளர்களின் ஊதியம் பல்வேறு முறைகளில் உள்ளது.

1. முழுநேர பணியாளர்கள் - களஉதவியாளருக்கு இணையான சம்பளம்

2. பகுதிநேர பணியாளர்கள் - சத்துணவு ஊழியர்களுக்கிணையான சம்பளம்

3. எந்தவித ஊதியமும் நேரிடையாக - மின்வாரியத்தால் வழங்கப்படாமல் பிரிவு அலுவலர், மற்றும் ஊழியர்களால் மாதந்தோறும் ஓதோ ஒரு தொகை வசூல் செய்யப்பட்டு சொற்ப தொகை பெற்று பணியாற்றும் ஊழியர்கள்.

பகுதி நேர பணியாளர்களுக்கு வேலை நேரம் 2 மணி நேரம் என இருந்தும், பிரிவு அலுவலர்களால் 6 மணி நேரம், 8 மணி நேரம் என கொத்தடிமை போல் வேலை வாங்கப் படுகிறது. இதில் வேறு எந்த வேலையும் கிடைக்காத காரணத்தால் அலுவலகம் பெருக்க, கழிவறையை கழுவ படித்து பட்டம் பெற்றவர்கள் கூட இந்த பணியை செய்ய

வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இவர்களுக்கு உள்முக தேர்வில் கூட அவர்களின் கல்வித்தகுதிக்கேற்ப தேர்வு செய்ய வலியுறுத்தியும் தமிழக அரசும், வாரிய நிர்வாகமும் காலம் தாழ்த்தி வந்தது. இயக்கங்களும், போராட்டங்களுமாய் நாட்கள் கடந்த பின்னரும் செவி சாய்க்காத அரசாக தமிழக அரசும், வாரியமும் இருந்தது வந்தது.

கடந்த இரண்டாண்டுகளாக கொரானா நோய் தொற்றுக்காலத்தில் இந்த ஊழியர்களின் கோரிக்கைகள் மீது நேரடி இயக்கம் காண இயலவில்லை. மின் ஊழியர் மத்திய அமைப்பின் நிர்வாகிகள் கூட்டம் கூடி 07.03.2022 அன்று மின்வாரிய தலைமையகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவு செய்தோம். சமீபத்தில் 2022 பிப்ரவரி 26-27-ல் திருச்சியில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவும் இந்த போராட்டத்திற்கு வடிவம் கொடுத்தது.

அதனடிப்படையில் கீழ்கண்ட கோரிக் கைகளை முன்வைத்து இயக்கம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

1. வாரிய தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் கோரப்பட்டு பணி நியமன உத்தரவு பெற்றவர்கள் போக மீதம் உள்ளவர்களை அடையாளங் கண்டு பணி நியமனம் வழங்கிட கோரி..
2. பல ஆண்டுகளாக பிரிவு, கோட்ட, வட்ட அலுவலகங்களில் பணி யாற்றும் பகுதிநேர பணியாளர்களை அடையாளங் கண்டு பணி நியமனம் வழங்கிட வலிறுத்தியும்..
3. அனைத்து பகுதிநேர பணியாளர் களையும் முழுநேர பணியாளர்களாக மாற்றி களஉதவியாளர் பதவிக்கு இணையான சம்பளத்திற்கு மாற்றி டவும்.
4. படித்து பட்டம் பெற்றவர்களை உள்முக தேர்வின் மூலம் கல்வித் தகுதிக்கேற்ப பணி மாற்றம் செய்திட வலியுறுத் தியும்...

வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதனடிப் படையில் 07.03.2022 அன்று காலை 10 மணிக்கு மின்வாரிய அனைத்து பகுதி நேர ஊழியர்களும் திரண்டனர். 1200-க்கு மேல் ஊழியர்களின் பங்கேற்பு இருந்தது.

முன்னதாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத் திற்கு மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் தலைமை தாங்கினார். மத்திய அமைப்பின் நிர்வாகிகள் தோழர்கள் கே. ரவிச்சந்திரன், கே.அருட்செல்வன், டி.பழனி வேல், எம்.தனலட்சுமி, எம்,சாலட், கே.அம்பிகாபதி, எம்.தயாளன், விஜயலட்சுமி டி.அறிவழகன் ஆகியோரும், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பி. ஸ்ரீதேவி, நாகையன் (நெல்லை), மரியதாஸ் - தூத்துக்குடி, பச்சையம்மாள், ஜெகன் - வேலூர் ஆகியோரும், கிளைச் செயலாளர்கள் தோழர்கள் எஸ். கண்ணன் - மத்திய சென்னை, எஸ்.தசரதன் - மேற்கு சென்னை, சத்திய மூர்தி - வடசென்னை, சண்முகம் - நீலகிரி, ரத்தினகுமார் - கோவை தெற்கு, ராமலிங்கம் - பல்லடம், பாண்டியன் - கோபி, ரகுபதி - சேலம், செல்வராஜ் - திருச்சி, நடராஜன்- புதுக்கோட்டை, கே. இராஜேந்திரன் - திருவாரூர், கலைச்செல்வன் - நாகை, காணிக்கைராஜ் - தஞ்சாவூர், காசிநாதன் - இராமநாதபுரம், கருணாநிதி - சிவகங்கை, சிவசீலன் - திருப்பத்தூர், கருணாநிதி - கிருஷ்ணகிரி, சீனிவாசன்- கள்ளக்குறிச்சி, பாலாஜி - திருவண்ணாமலை, சேகர் - விழுப்புரம், தேசிங்கு - கடலூர், தேவகுமார்- செங்கற்பட்டு, முத்து- சென்னை ஜி.சி.சி, மற்றும் மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில தலைவர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் ஆகிய தோழர்கள் வாழ்த்தி பேசினார்கள்.

நமது போராட்டத்தை வாழ்த்தி சிஐடியுவின் மாநில தலைவர் தோழர்

அ.சவுந்தரராஜன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவர் தனது வாழ்த்துரையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் தமிழக அரசு தொழிலாளிகளை ஏமாற்றி வருவதை சுட்டிக்காட்டியதோடு, போராட்ட வடிவங்களையும் தொழிலாளி வர்க்கத்திற்கு மாற்றம் தெரியும் எனவும், பகுதிநேர பணியாளர்களின் உத்திரவுகளுக்கு பணி நியமன உத்திரவு வழங்க என்ன தடை என அரசுக்கும், மின்வாரிய நிர்வாகத்திற்கும் கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்து மின்வாரிய தலைவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டு தோழர் அ.சவுந்தரராஜன் அவர்களுடன் மத்திய அமைப்பின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மின்வாரிய தலைவருடன் பேச்சு வார்த்தையின் போது வாரிய தலைவர் பணி நியமன உத்தரவிற்காக காத்திருக்கும் பகுதிநேர பணியாளர்களுக்கு விரைவில் உத்தரவு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், விபரங்கள் கோராத பகுதிநேர பணியாளர்களை வாரிய அலுவலகத்திலிருந்து விவரங்கள் பெற உத்திரவு வெளியிடுவதாக கூறியதோடு, இதர கோரிக்கைகளை முழுநேர பணியாளர்களாக மாற்றுவது உள்முகத்தேர்வில் முன்னுரிமை கொடுப்பது போன்றவைகளின் மீது மின்துறை அமைச்சரோடு பேசி தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.

மின்வாரிய தலைவரின் உறுதி மொழியை அடுத்து ஆர்ப்பாட்ட திடலுக்கு சென்று மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் போராட்டத்தின் நோக்கம் குறித்தும், மின் வாரியத் தலைவரின் அறிவிப்பு குறித்தும் தொழிலாளர்கள் மத்தியில் பேசினார். போராட்டங்களை வலிமையோடும், ஒற்றுமையோடும் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கி பேசினார்.

நிறைவாக மத்திய அமைப்பின் பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன் நன்றி உரையாற்ற கூட்டம் இனிதே முடிந்தது. கோஷங்களோடு கோரிக்கைகளின் வெற்றியையும் நமது தோழர்கள் சுமந்து சென்றனர்.



# போராட்டத்தையொட்டி மின்வாரிய தலைவருடன் பேச்சு வார்த்தையின் போது பணி நியமன உத்தரவிற்காக காத்திருக்கும் பகுதிநேர பணியாளர்களுக்கு விரைவில் உத்தரவு வழங்க கோரி வாரியத் தலைவரிடம் அளித்த கடிதம்

**பெறுநர்** நாள் 07.03.2022

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை
சென்னை- 600 002

**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : நிர்வாகம் - பகுதிநேர பணியாளர்கள் - நிரந்தரம் குறித்து**

**பார்வை** : 1. (Per) CMD TANGEDCO Proceeding No.76, dated 09 November 2020

2. *எங்களது கடித நாள் 19.08.2021*

தமிழ்நாடு மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக சொற்ப கூலித்தொகையில் துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். இவர்களை நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க கோரி உச்சநீதிமன்றம் வரை சென்று தீர்ப்பை பெற்றது எங்களது அமைப்பு.

அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து மீண்டும் தொடர்ந்து பணியாற்றுபவர்களை எங்களது கோரிக்கையின் அடிப்படையில் நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்கியது. இதில் பல்வேறு காரணங்களால் பலர் விடுபட்டு இருந்தனர்.

விடுப்பட்டவர்களின் விபரங்களை வட்ட அலுவலகத்திலிருந்து வாரிய உத்திரவுகளின் படி பெறப்பட்டு தலைமைப்பொறியாளர் பணிமையப்பு அலுவலகத்தில் பல மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் கடந்த 22.12.2016 அன்று பகுதிநேர பணியாளர்களின் கோரிக்கைகளோடு இதர கோரிக்கைகளையும் இணைத்து கூட்டு முறையீடு பெருந்திரள் போராட்டம் நடத்தினோம். அந்த போராட்டத்தையொட்டி பேச்சுவார்த்தை நடத்திய பொழுது அப்போதைய வாரிய உயர் அதிகாரிகளால் பகுதிநேர ஊழியர்களுக்கு 31.01.2017-க்குள் உத்திரவு வழங்கப்படும் என உறுதி அளித்தத்தின் பேரில் இருதரப்பிலும் கையொப்பம் பெற்று அந்த போராட்டம் முடிவு பெற்றது.

அதன்பின் பல்வேறு கட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் பல வட்டங்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு விட்டது. இன்னும் சில வட்டங்களுக்கு விபரங்கள் கோரப்பட்டு அது திரும்ப பெறுவதில் காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது இந்த பாதிக்கப்பட்ட பகுதிநேர ஊழியர்களுக்கு முழுமையான விவரங்களை பெற்றும் உரிய காலத்தில் நிரந்தரத்திற்கான உத்திரவு நிர்வாகத்தின் காலதாமதத்தால் வழங்க இயலவில்லை. இதற்கிடையில் பார்வையில் கண்ட வாரிய உத்தரவின் மூலம் இந்த பணிகளை முழுமையாக அவுட்சோர்சிங் விடுவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்தது.

எனவே, விபரங்கள் இருந்தும் நிர்வாகத்தின் காலதாமதத்தால் பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்களுக்கு ஏற்கனவே இவர்களின் நிரந்தரம் சம்மந்தமாக உடன்பாடு கண்ட காரணத்தையும் கணக்கில் கொண்டு நிரந்தரம் செய்வதற்கான உத்திரவு வழங்க தகுந்த நடவடிக்கை எடுத்திடுமாறும் அதே போல பல்வேறு இடங்களில் தொடர்ந்து பணியாற்றி வரும் பகுதி நேர பணியாளர்களை அடையாளம் கண்டு நிரந்தரம் படுத்துகின்ற நடவடிக்கையும், எடுத்திடுவதோடு இவர்களை முழுநேர பணியாளர்களாக மாற்றி களஉதவியாளர்களுக்கான ஊதியத்தையும் நிர்ணயம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் /தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



# தென்சென்னையில் சர்வதேச பெண்கள் தின கொண்டாட்டம்



# ஒன்றிய அரசு பட்ஜெட் 2022- 2023
# காகிதமில்லா பட்ஜெட் கார்ப்ரேட்கான பட்ஜெட்!

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனாதிபதி உரையுடன் ஜனவரி 31-ம் தேதி துவங்கியது. 2022- 2023 -க்கான பட்ஜெட்டை காகிதமில்லா பட்ஜெட்டாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பிப்ரவரி 1-ம் தேதி தாக்கல் செய்தார்.

2023-ம் ஆண்டிற்கான மொத்த செலவு 39.45 லட்சம் கோடி நாட்டின் மொத்த வருவாய் 22.48 லட்சம் கோடியும் பற்றாக்குறை 16.97 லட்சம் கோடியாகவும் உள்ளது. வரும் நிதியாண்டில் 6.4 சதவீதம் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2021-2022 **G .T.P**-யில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட தொகை 6.91 சதவீதமாக இருந்தது. 2022-2023-ல் 6.25 சதவீதமாக குறைந்துள்ளது. இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான இலக்கு 9.2 சதவீதம் 2022-2023 நிதியாண்டில் மொத்த செலவீனங்கள் 29.45 லட்சம் கோடி.

2022 ஜனவரி **G.S.T** வரி மூலம் 140 லட்சம் கோடி வருவாய் வந்துள்ளது என்று அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. தற்போது இந்தியாவில் கடன் 23 லட்சம் கோடியாக உள்ளது. அப்படியென்றால் கார்ப்பரேட் முதலாளிகள் தவிர்த்து இந்திய குடிமக்கள் அனைவரும் கடனாளிகளே.

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் வரிக்குறைப்பே இல்லையா இருக்கிறது. இருக்கிறது. ஆடைகள், ரத்தின கற்கள், வைரங்கள், மீதைல் ஆல்கஹால் உட்பட 11 பொருட்களுக்கு விலை குறையுமாம் குறிப்பாக வைரத்திற்கு 5% சுங்கவரி குறைக்கப்படுகிறது.

முதியவர்கள், நடுத்தரத்தினர் மழை, வெயிலுக்கு பயன்படுத்தும் குடமைக்கு 20% வரியும், வைரம், தங்கம், ஆபரணங்கள் பார்க்க முடியாத ஏழை எளிய மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பெயர் சூட்டி மகிழ்ந்து விட்டு கவரிங் நகையே அணிகிறார்கள். அதற்கும் இனி கூடுதல் வரி, மேலும் நோய் கண்டறிய உதவும் எக்ஸ்ரே இயந்திரம், ஸ்மார்ட் மீட்டர், குழந்தைகள் விளையாடும் மின்னனு பொம்மை பாகங்கள், நாப்கின் உட்பட 7 பொருட்கள் வரி 8 வீதம் முதல் 20 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

சோலார் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் 19 ஆயிரத்து 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சோலார் மின் உற்பத்தியில் அரசு நிறுவனங்களை விட அதானி குழுமமே பெரும்பாலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2030-ம் ஆண்டுக்குள் சோலார் மூலம் மின் உற்பத்தி 280 மொகாவாட் என இலக்கு நிர்ணியிக்கப்பட்டுள்ளது. உணவு மற்றும் பொது விநியோக திட்டத்திற்கு வெறும் 2.17 லட்சம் கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரானா பெருந்தொற்று பொது முடக்கத்தை வேலையிழந்த பலகோடி பேர்களுக்கு பொது விநியோக திட்டம் மூலம் உணவு உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பது நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. இந்திய

தேசத்தில் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் சமூக பாதுகாப்பாக நம்பிய **LIC** பங்குள் 5% வீதம் தனியார்க்கு முதல் கட்டமாக விற்கப்படுகிறது.

**BJP** ஆட்சியில் ஆண்டுக்கு 2 கோடி பேர்க்கு வேலை வழங்கப்படும் என்று பிரதமர் மோடி சொன்னதை மக்கள் மறக்கவில்லை. இந்த பட்ஜெட்டில் வரும் 5 ஆண்டுகளில் 60 லட்சம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்கிறார்கள். அப்படியென்றால் ஆண்டிற்கு 12 லட்சம் வேலை வாய்ப்பு மட்டுமே என்றால், 2 கோடி வேலை வாய்ப்பு என்னாச்சி என கேள்வி எழுகிறது.

கொரானா பெருந்தொற்று பொது முடக்கத்தால் 1 கோடியே 14 லட்சம் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு திரும்பி உள்ளனர். அன்றாட தினக்கூலி பணியாளர்கள் தவிர்த்து மாத வருவாய் பெற்று வந்த தொழிலாளர்கள்சுமார் 12 கோடிக்கு மேல் வேலை இழந்துள்ளனர் என ஒன்றிய அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

அமைச்சரோ, நடாளுமன்றத்தில் கடந்த 2014 முதல்7 ஆண்டுகளில் 1486 தொழிலாளர் தொழிற் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டது என பெருமிதம் கொள்கிறார். உலக வறுமை பட்டியலில் 116 நாடுகளில் இந்தியா 104 வது இடமாகவும், 15கோடி மக்கள் வருவாய் 53% ஆகவும் குறைந்துள்ளது. இது குறித்து எந்த தகவலும் இல்லை, கவலைப்படவும் இல்லை.

நில சீர்த்திருத்த சட்டம் என்ற பெயரில் விவசாயப் பொதுமக்கள் நிலங்களை அபகரிக்க நினைத்ததை பெரும் போராட்டம் மூலம் வாபஸ் பெற வைத்தது நினைவு இருக்கலாம். ஆனால் தற்போது இதையே மறைமுகமாக **"ஒரே நாடு ஒரே பத்திரப்பதிவு"** என நாட்டில் எந்த பகுதியில் இருந்தும் நில பத்திரப்பதிவு செய்யலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 8 ஆண்டுகளில் வருமான வரி செலுத்தும் அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினருக்கு வருமான வரி கழிவு 10% த்தில் இருந்து 14 % ஆக உயர்த்தப்பட்டுள்ளதே தவிர வருமான வரி விலக்கில் எந்த மாற்றமும் இல்லை என்பது பெரும் ஏமாற்றமே.

இந்திய தேசத்தில் ஏழைகள் 60 %, நடுத்தரம் 30 %, பணக்காரர்கள் 10 % ஆகவும் உள்ளனர்.

இந்த பட்ஜெட்டில் கார்ப்பரேட் வரி 12 %, இருந்து 7 %, வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. 2019 முதல் கார்ப்பரேட்டுகளுக்கு வரிச்சலுகை 11/2 லட்சம் கோடியும் 2021-ல் கார்ப்பரேட்டுகளுக்கு வலி சலுகை 72.04 கோடி வழங்கி உள்ளது. கார்ப்பரேட் நிறுவன வரியால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் மட்டும் சுமார் 7 முதல் 12 %, இழப்பு ஏற்பட்டுள்ளது. மட்டும் மேலும் கார்ப்ரேட் வரிகள் மறைமுகமாக அரசை ஏமாற்றியது மட்டும் 4.05 லட்சம் கோடியாகும் இதை வசூலிக்க எந்த ஏற்பாடும் செய்ய முன் வரவில்லை. 142 கார்ப்பரேட் முதலாளிகள் சொத்து மதிப்பு 23 லட்சம் கோடியில் இருந்து தற்போது 56 லட்ச கோடியாக உயர்ந்துள்ளது என புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் இந்த காகிதமில்லா பட்ஜெட்25 ஆண்டுக்கானபட்ஜெட் என்கிறார். பிரதமர் மோடியோ 100 ஆண்டுக்கான பட்ஜெட் என்கிறார். இல்லை இல்லை இந்த பட்ஜெட் காகிதமில்லா பட்ஜெட் கார்ப்பரேட்டுக்கான பட்ஜெட்டே என்பது தான் உண்மை.

**- எஸ்.வண்ணமுத்து**



## வாழ்த்துக்கள்

தோழர் **சக்திவேல்** கணக்கீட்டாளரி லிருந்து கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வில் கரூர் வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ததை மாற்றி திருச்சி/மாநகர் வட்டத்திற்கு பெற்று தந்ததை முன்னிட்டு....

திருச்சி மாநகர் கிளைக்கு ரூ. 8,000/-ம்,
மின்கதிர் வளர்ச்சி நிதிக்கு ரூ. 1000/-ம்,
நிர்மல் பள்ளி நிதி ரூ. 1000/-ம்

என ரூ. 10,000/-ம் அளித்தார் (எஸ். ரெங்கராஜன் மூலம்)



# மக்களின் வறுமைக்கும், இளைஞர்களின் கல்வி, வேலையில்லாமைக்கும் யார் காரணம்..!

ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக சொல்லும் கோஷம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வறுமையை ஒழிப்போம். தொழில்கள் வளர்ப்போம். அனைவருக்கும் கல்வி அளிப்போம், வேலை யில்லா திண்டாட்டத்தை ஒழிப்போம் என்று சொல்லும் வார்த்தைகள் இன்று அர்த்தமற்றதாகி விட்டது. மக்கள் இந்த வாக்குறுதிகளை நம்பி, நம்பி 70 ஆண்டுகளாக ஏமாந்து வருகின்றனர். மத்திய, மாநில ஆட்சியாளர்கள் கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் மூலம், ஊடகங்களின் மூலம் மீண்டும் மீண்டும் வாக்குகளை பெற்று ஆட்சி கட்டிலில் ஏறி வருகின்றனர்.

ஒன்றிய அரசோ, மாநில அரசோ இன்று வரை அரசியல் சாசன சட்டத்தில் சொல்லப்பட்ட கல்வி, உணவு, வீடு, வறுமை ஒழிப்பு, தரமான சுகாதாரம் போன்றவற்றை இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளை கடந்த பின்பும் அளிக்க முடியவில்லை என்றால் அதற்கு அடிப்படை காரணம் மக்களுக்காக அரசு ஆட்சி செய்கின்றதா அல்லது ஆட்சியாளர்களுக்காக மக்கள் உள்ளனரா என்ற நிலையில் இருந்து பார்க்க வேண்டியுள்ளது. உண்மையில் இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் மக்கள் நலனை முதன்மையாக கொள்ளாமல் முதலாளிகளின் நன்மையை முதன்மையாக கொண்டு ஆட்சி செய்வதால் ஏற்பட்ட மற்றும் ஏற்பட்டு வரும் பலவீன போக்காகும். இன்னும் எளிமையாக சொல்வதென்றால் முதலாளித்துவ கொள்கைக்கும் மக்கள் நலன் சார்ந்த பொதுவுடமை கொள்கைக்கும் உள்ள வேறுபாடு தான் மக்களின் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணமாக உள்ளது. இதை மக்கள் புரிந்து கொள்ள முடியாத தன்மை என்பது முதலாளித்துவ கட்சிகளுக்கு சாதகமாக அமைகின்றது.

உலகில் மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடு சீனா. சுமார் 165 கோடி மக்களை கொண்டது. நமக்கு பிறகு சுதந்திரம் பெற்ற நாடு. இன்று அமெரிக்காவையும் முந்தி பணக்கார நாடு, ஏழைகள் குறைவாக உள்ள நாடு, கொரானா காலத்தில் GDP குறையாத நாடு என்று எல்லாவற்றிலும் வளர்ச்சியடைந்த நாடு சீனா. தனி நபர் வருமானம் உட்பட இரயில்வே, கட்டுமானம், வான்வெளி என அனைத்திலும் அசுர வளர்ச்சி கண்டு உலகையே பிரமிக்க வைத்துள்ளது சீன நாடு.

இந்த வளர்ச்சி எப்படி சாத்தியம் என்று கேட்டால் சீனா ஒரு கம்யூனிச நாடு. அதனால் சாத்தியமானது என்பார்கள். ஏனெனில் பொதுவுடைமை கோட்பாடு என்பது மக்களுக்காக அவர்களின் வாழ்க்கை வளம்பெற உருவாக்கப் பட்டடது. ஒரு சிலர் பயன்பெறவும், வளம் பெறவும் உருவாக்கப்பட்ட கொள்கை முதலாளித்துவ கொள்கை என்பதை தொழிலாளிகளும், விவசாயிகளும், சாமான்ய மக்களும் உணராத வரை முதலாளித்துவத்தின் ஏமாற்று வேலை தொடர்ந்து கொண்டே இருக்கும். முதலாளித்துவம் ஆட்களை, கட்சிகளை மாற்றி, மாற்றி முகத்தை காட்டும்.

புதியவர் நல்லது செய்வார் என்று நம்பச் செய்யும், மீண்டும் பழைய நிலையே தொடரும். இது முதலாளித்துவ கொள்கையின் தனிச்சிறப்பு.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் கல்வி, வேலை, சுகாதாரம்,வறுமை ஒழிப்பு, இவற்றில் அரசு போதிய கவனம் செலுத்தினாலே அதற்கான கட்டமைப்பை உருவாக்கினாலே நாம் முன்னேற முடியும். ஆனால் முதலாளிகளின் கைப்பாவையாக செயல்படும் மத்திய மாநில அரசுகள் திட்டமிட்டு அதை செய்வதில்லை. ஏனெனில் இவர்கள் பெரும்பான்மை மக்களாக உள்ள ஏழை, எளிய, சாமான்ய மக்களுக்காக ஆட்சி செய்வதில்லை. மக்கள் தொகையில் மிக சிறிய எண்ணிக்கையில் உள்ள செல்வந்தர்களுக்கும், பெருமுதலாளிக்குமான ஆட்சி செய்பவர்கள். இதை நாம் புரிந்து கொண்டால் மாற்றத்திற்கான வழியை தேட துவங்குவோம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், செல்வ வளத்துக்கும் மிக முக்கிய காரணிகளாக இருப்பது இளைஞர்கள் தான். இவர்களை புறந்தள்ளிவிட்டு வளர்ச்சியை பற்றி யாரும் பேசிட முடியாது. இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் தொழில் துவங்க வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் இவர்கள் முக்கிய பங்கை அளிக்கின்றார்கள். நாட்டின் மொத்த வாய்ப்புகளையும், தொழில் வாய்ப்புகளையும், வங்கிகள் நிதி மூலதனத்தையும், பெரும்பான்மை மக்களுக்கு வழங்காமல் மறுப்பதே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும், வளர்ச்சியின்மைக்கும் மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளது. மக்கள் தொகை அதிகரிப்பு என்பது செல்வ மூலதனம் போல, இது உழைப்பு செலுத்தக்கூடிய உழைப்பு மூலதனம். இதுவும் ஒரு செல்வம் தான். இந்த உழைப்பு செல்வத்தை யார் சரியாக பயன்படுத்துகிறார்களோ அவர்கள் வளர்ச்சியடைகின்றார்கள்,வெற்றியடைகின்றார்கள். இடதுசாரிகளும் பொதுவுடைமைவாதிகளும் உள்ள நாடுகளில் உழைப்பின் பெருமையை உணர்ந்தவர்கள் இதை சிறப்பாக கையாண்டு வருகின்றனர். இந்தியா பூமிபந்தில் தென் திசையில் அமைந்துள்ள நாடு. காடுகள், கடல், ஆறுகள், தங்கம், நிலக்கரி, இரும்புதாது போன்ற எண்ணற்ற இயற்கை வளங்களை அள்ளி அள்ளி தருகின்ற நாடு. இயற்கை சீற்றங்கள் வராத, பருவம் தவறாத மழை பொழிவு கண்ட நாடு, மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சீதோசன நிலை கொண்ட நாடு. இவையனைத்தும் கொண்ட தாய்திரு நாட்டில் படித்த இளைஞர்கள், மாணவர்கள் வேலைக் காகவும், மேல்படிப்புக்காகவும் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கான வாய்ப்பு இங்கு மறுக்கப்படுகின்றது. அவர்களுக்கான தரமான கல்வி இங்கே இல்லை என்று தானே பொருள்.

இளைஞர்களுக்கான கல்வி, வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றை 75 ஆண்டுகளாக செய்யாத முதலாளித்துவம் இனிமேலா செய்யும் என்பதை நாம் புரிந்து கொண்டால், இளைஞர்கள் அறிந்து கொண்டால் இதற்கெல்லாம் காரணம் முதலாளித்துவ கொள்கை தான் என்பதை புரிந்து கொண்டால் சமூக மாற்றமும், அரசியல் மாற்றமும், தானாக நடக்கும்.

அப்படிப்பட்ட மாற்றத்திற்கான பணியை நாம் தொடர்ந்து செய்வோம்... பொதுவுடமை சித்தாந்தத்தை உலகெங்கும் சொல்வோம்.

**- தி. ஜெயசங்கர்**



## ராமநாதபுரத்தில் சர்வதேச பெண்கள் தின கொண்டாட்டம்

# போராட்ட களம் காண வியூகம் அமைத்த.....

**மார்ச் 7**
**பகுதி நேர பணியாளர்கள்**
**மின்வாரிய தலைமையகம் முன்பு**
**கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**
**மார்ச் 16**
**ஒப்பந்த தொழிலாளர்கள்**
**சென்னை மின்வாரிய தலைமையகம்**
**முன்பு ஆர்ப்பாட்டம்**
**மார்ச் 23**
**நிரந்தர ஊழியர்கள்**
**வட்டமேற்பார்வையாளர் அலுவலகம்**
**முன்பு ஆர்ப்பாட்டம்**

## மாநில பொதுக்குழு முடிவுகள்




**மாநில பொதுக்குழு கூட்டம் திருச்சி மாநகரில்** 2022 **பிப்ரவரி** 26,27 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முன்னதாக காலை 10.00 மணிக்கு செங்கொடியை மத்திய அமைப்பின் தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் ஏற்றி வைத்தார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு பொதுக்குழு கூட்டம் துவங்கியது.

பொதுக்குழு கூட்ட நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் தலைமையேற்றார். மத்திய அமைப்பின் மாநில துணை தலைவரும்,வரவேற்புக்குழுவின் தலைவருமான தோழர் எஸ்.ரங்கராஜன் வரவேற்புரை ஆற்றினார். திருச்சி மண்டல செயலாளரும் வரவேற்புக்குழுவின் செயலாளருமான தோழர் எஸ்.அகஸ்டின் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனையடுத்து மத்திய அமைப்பின் தலைவர் தலைமை உரையில் மத்திய அரசின் பொருளாதார நடவடிக்கைகளால் இந்திய இளைஞர்களுக்கு வேலைவாய்பின்மை அதிகரித்து வருகிறது என்றும், ஒன்றிய பி.ஜே.பி.அரசு பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்க எடுத்து வரும் நடவடிக்கைகள். மிகவும் ஆபத்தானது என்றும் இதையொட்டி மின்வாரியத்தை நஷ்ட கணக்கைக்காட்டி தனியாரிடம் ஒப்படைப்பார்கள் என்றும்,தற்போதுள்ள கோரிக்கைகளான ஊதிய உயர்வு,காலிப்பணி இடங்களை நிரப்புவது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட வேண்டும் என்று கூறினார். நமது கோரிக்கை மட்டுமல்லாது மின்வாரியம் இன்சூரன்ஸ் உள்ளிட்ட அனைத்து பொதுத்துறைகளையும் பாதுகாக்க நாம் போராடினால் தான் மின்வாரியத்தை பாதுகாக்க முடியும் என்று கூறினார்.

அதன் பின்னர் மார்ச் 28,29-ல் அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தை மின் வாரியத்தில் வெற்றிகரமாக்க, மாநில பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் தீர்மானத்தை முன்மொழிந்தார். தோழர் டி.பழனிவேல் மாநில துணை பொதுச்செயலாளர் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

பொதுக்குழுவை துவக்கி வைத்து சிஐடியுவின் தமிழ் மாநிலக்குழுவின் பொதுச்செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் அவர்கள் தனது உரையில் ரஷ்யா, உக்ரைன் போர் தொடர்பாகவும் இந்த பிரச்சனையினால் இந்தியாவில் எந்த பிரச்சனையும் பேசப்படுவதில்லை.புதிய பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு துடித்துக்கொண்டிருக்கிறது. கடந்த 50 ஆண்டுகால பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்துள்ளதை கவனத்தில் கொள்ளாமல் தனியாரிடம் ஒப்படைக்க அனைத்து யுக்திகளையும் கையாண்டு வருகிறது. எதிர்காலத்தில்நமது போராட்டங்களை விரிவுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், ஸ்தாபன பலத்தை அதிகரிக்கவும் நம்மை திட்டுமிட்டு செயலாற்ற கேட்டுக்கொண்டார்.

மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் கடந்த திருநெல்வேலி மாநாட்டிற்கு பின்பு நடைபெற்ற பணிகள் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பித்தார். மேலும் இன்றைக்குள்ள ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிலை மின்துறையை தனியார் மயமாக்க அது எடுக்கும் நடவடிக்கை,புதுக்சேரி மாநிலத்தில் மின்துறையை தனியார் மயமாக்க எடுத்த நடவடிக்கை அதில் மத்தியஅமைப்பின் பங்கு, ஊழியர்களின் கோரிக்கைகளில் தலையீடு,கேங்மேன் தொழிலாளர்களின் கோரிக்கை, மின் வாரியத்திலுள்ள தொழிற்சங்கங்களின் ஒற்றுமை, கிளைகள் சுயேட்கையாக செயல்பட வேண்டியதன் அவசியம், வரவு-செலவு கணக்குகளை கிளைகள் பராமரிக்க வேண்டிய அவசியத்தையும், கிளைகள் பேரவையை உடனடியாக நடத்த வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

அதே போல எதிர்கால கடமைகள் என்ற வகையில் கிளைகள் ஜனநாயக ஸ்தாபன கோட்பாட்டுடன் சுயேட்சையாக இயங்குவதும், மாதம் ஒரு முறை கிளை நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டுவதும், மண்டலக்குழு கூட்டங்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடுவது, கிளைகளில் கேட்டகிரி குழுக்களை உருவாக்குவது, புதிய கேடர்களை கண்டு பிடித்து பயிற்சி அளித்து தொழிற்சங்க தலைமை பொறுப்புக்கு கொண்டு வருவது, தொழிற்சங்க வகுப்புகளை மாதந்தோறும் நடத்துவது,வலுவான ஸ்தாபன கட்டமைப்பை உருவாக்குவது, உறுப்பினர் பதிவை ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிப்பது குறித்தும், உறுப்பினர் பதிவு தொடர்பாகவும், மின்சார சட்டத்திருத்தம் தொடர்பாக நுகர்வோரிடமும்,பொது மக்களிடமும் அனைத்து பகுதி ஊழியர்களிடமும் கொண்டு செல்வது, இதன் மூலம் வர்க்க ஒற்றுமையை நாம் கட்டவேண்டிய கடமைகள் குறித்து பேசினார்.

அதனையடுத்து மத்திய அமைப்பின் வரவு,செலவு மற்றும் மின்கதிரின் வரவு- செலவு கணக்குகளை (டிசம்பர் 2021 வரை) பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன் சமர்ப்பித்தார். குடும்பநல பாதுகாப்பு திட்டத்தின் வரவு-செலவு கணக்குகளை தோழர் கே. பரந்தாமன் சமர்ப்பித்தார்.

முன்னதாக தீர்மானக்குழுவில் தோழர்கள் ஆர்.குருவேல், கே.காங்கேயன், எம். பீர்முகமதுஷா, பாலாஜி - திருவண்ணாமலை, எஸ். கண்ணன் - மத்திய சென்னை, எஸ்.சிவசீலன் -திருப்பத்தூர், என். தேசிங்கு -கடலூர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மேலும் ஆர்.குருவேல் கன்வீனராக செயல்பட்டு பொதுக்குழுவில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்ட நடவடிக்கைக்குழுவில் (மினிட்ஸ் குழு) தோழர் எஸ்.உமாநாத் - கன்வீனராகவும், எஸ்.தசரதன்-மேற்கு சென்னை, டி.கந்தசாமி - நெல்லை, தேவகுமார் - செங்கை, ஜெலன் தேவகிருபை - தென்சென்னை-2 ஆகியோர் செயல்பட்டனர்.

பொதுச்செயலாளர் அறிக்கையின் மீது 66 தோழர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

மாநில பொதுக்குழுவை வாழ்த்தி மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில துணை பொதுச்செயலாளர் தோழர் எம். பாலசுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார்.

அதனை அடுத்து பொதுக்குழு உறுப்பினர்கள் பொதுச்செயலாளர் அறிக்கையின் மீது தெரிவித்த கருத்துக்களுக்கு, வரவு,செலவு கணக்கு தொடர்பாக பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன் அவர்களும், வேலை அறிக்கையின் மீது வந்த கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் அவர்களும் தொகுப்புரை வழங்கினார்கள்.



## வேர்களுக்கு விழுதுகளின் பாராட்டு

திருச்சி மண்டலத்தில் மத்திய அமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி பணிஓய்வு பெற்ற முன்னாள் மாநில நிர்வாகிகள் தோழர் எம். பன்னீர்செல்வம், தோழர் ஜீ. பஷீர், தோழர் வி.பி. கந்தசாமி ஆகியோர்க்கு மாநிலப் பொதுக்குழுவில் பாராட்டி சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.



மாநிலப் பொதுக்குழுவில் ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் சார்பில் சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த தோழர் செல்வராஜ் அவர்களுக்கு பொதுச் செயலாளர் எஸ். ராஜேந்திரன் சால்வை அணிவித்தார். தோழர் வி. பிச்சைராஜன் அவர்களுக்கு பொருளாளர் எம். வெங்கடேசன் சால்வை அணிவித்தார்.

# பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளும், இயக்கங்களும்..

1. 2021 ஆண்டு உறுப்பினர் பதிவை கிளைகள் மார்ச் 15-க்குள் மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டும். இதற்கு பின் வரும் உறுப்பினர் பதிவு அரசின் கணக்கில் வராது என்பதை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். மேலும் 2022 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பதிவை ஏப்ரல் 30-க்குள் முடித்திட வேண்டும்.
2. 2023 ஆண்டு நேரடி உறுப்பினர்களிடம் ஆண்டு சந்தாவை ரூ.400/-ஆக பெறுவது இதில் கிளைகளுக்கு ஈவுத்தொகையாக ரூ.150/-ம், மாநில மையத்திற்கு சந்தா ரசீதுடன் ரூ.250/-ஐ அனுப்பிட வேண்டும் என உறுப்பினர் பதிவில் திருத்தம் கொண்டு வந்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

   **இதில் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் டைரி, மற்றும் காலண்டர் மாநில மையத்திலிருந்து அனுப்பி வைப்பது என முடிவு செய்யப்பட்டது.**
3. கிளை பேரவைகளை தணிக்கை செய்து உடனடியாக நடத்திட வேண்டும்.
4. சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8-ல் உழைக்கும் மகளிருக்கான கோரிக்கைகளோடு ஜனநாயக மாதர் சங்கம் நடத்தும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியில் மின்வாரிய உழைக்கும் பெண்களை பங்கேற்க வைப்பது.

## 5. பகுதி நேர ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

பகுதிநேர ஊழியர்களை அடையாளங் கண்டு வட்ட அலுவலகத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து வழங்கியதில் ஒரு சில வட்டங்களுக்கு மட்டுமே பணி நியமன உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு உத்திரவு வழங்கிட கோரியும். இவர்களைத் தவிர பல ஆண்டுகளாக அடையாளங்காணப்படாத பல ஆண்டுகளாக பணிபுரியும் **பகுதிநேர பணியாளர்களை அடையாளங்கண்டு பணி நிரந்தரம் செய்திடக்கோரி வலியுறுத்தி 07.03.2022 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை மின்வாரிய தலைமையகம் முன்பு கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.**

## 6.ஒப்பந்த ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக விநியோகம், அனல், புனல், கட்டுமானம், மரபுசாரா எரிசக்தி உள்ளிட்ட பகுதிகளில் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங் கண்டு மின் வாரியமே 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியை நேரிடையாக வழங்கிட வலியுறுத்தியும், தமிழக திமுக அரசு தனது தேர்தல் அறிக்கையில் பொதுத்துறை நிறுவனங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என தெரிவித்துள்ளதை கணக்கில் கொண்டும், மின்வாரியத்தில்உள்ள காலிப்பணி இடங்களை கணக்கில் கொண்டு பணி நிரந்தரம் செய்திட வலியுறுத்தி 1**6.03.2022 ஒரு நாள் மின்வாரிய தலைமையகம் முன்பு தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் தர்ணா போராட்டத்தை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.**

## 7. நிரந்தர ஊழியர்களின் ஆர்ப்பாட்டம்

நிரந்தர ஊழியர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளான ஊதிய உயர்வு, காலிப்பணி இடங்கள் நிரப்பிட, முந்தைய ஆட்சியாளர்களால் அறிவித்த ஐடிஐ, கணக்கீட்டாளர், தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை உதவியாளர்,உதவி பொறியாளர் ஆகிய ஆரம்பகட்ட பதவிகளை நிரப்பிடவும், கேங்மேன் பணியாளர்களின் ஊர்மாறுதல், களஉதவியாளர் பணி மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகளையும் வலியுறுத்தியும், தரமான தளவாட பொருட்கள் வழங்கிடவும், விருப்ப மாறுதலில் அரசியல் தலையீடுயின்றி வாரிய உத்தரவுகளை அமல்படுத்தவும் **மார்ச் 23-ல் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு மாலை நேர ஆர்ப்பாட்டத்தை நடத்திடுவது.**

8. அனல் உற்பத்தி, புனல் உற்பத்தி ஆகிய இடங்களில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட இதர பிரச்சனைகளில் தீர்வுக்காண வலிறுத்தி இயக்கம் காண்பது.
9. **தேசத்தின் பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாத்திடவும், மின்சார சட்டத்திருத்த மசோதாவை கைவிட கோரியும், இதர கோரிக்கைகளை வலியுத்தியும் மார்ச் 28,29-ல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தில் மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர் அனைவரும் பங்கேற்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.**
10. கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி 2022 ஏப்ரல் 2வது வாரத்தில் இயக்கம் நடத்துவது...
11. கேங்மேன் ஊழியர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளை வலியுறுத்தி தனி இயக்கம் காண்பது என்பன போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

*நிறைவாக சிஐடியுவின் மாநில செயலாளர் தோழர் கே.சி.கோபிகுமார் பொதுக்குழுவை வாழ்த்தியும், 2022 மார்ச் 28,29 வேலை நிறுத்தத்தினுடைய அவசியத்தையும் விளக்கி ஸ்தாபன பலத்தை அதிகரித்து முன்னேற வாழ்த்தி நிறைவுரை ஆற்றினார்.*

*மாநில துணைத் தலைவர் தோழர் எஸ். இராஜாராமன் நன்றி கூற பொதுக்குழு இனிதே நிறைவடைந்தது.*

## பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.....

(அ) மின்துறை, இன்சூரன்ஸ், வங்கி, இரயில்வே, போக்குவரத்து போன்ற துறைகளை பொதுத்துறைகளாக பாதுகாத்திட 2022 மார்ச் 28, 29 -ல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தில் மின் ஊழியர்கள் அனைவரும் பங்கேற்பது.

(ஆ) ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு தினக்கூலியை மின்வாரியமே வழங்கிட வலியுறுத்தி நிரந்தரம் செய்ய வேண்டுமெனவும்.

(இ) கேங்மேன் ஊர்மாற்றம், பயிற்சி காலம் குறைப்பு, களஉதவியாளர் பணி மாற்றம் உள்முக தேர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற கோரிய தீர்மானம்.

(உ) ஊதிய உயர்வு 01.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அனைவருக்கும் வழங்கிட கோரிய தீர்மானம்.

(ஊ) காலிப்பணி இடங்களை நிரப்பிடக் கோரிய தீர்மானம்.

## பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்.....

1. மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற பகுதிநேர பணியாளர்களில் விபரங்கள் சேகரிக்கப்பட்ட வாரிய தலைமையிடத்தில் பணி நியமன உத்திரவு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் உள்ளது. பாதிக்கப்பட்ட 1023 பணியாளர்களுக்கு பணி நியமன உத்திரவை விரைந்து வழங்கிடவும், அதே போல அடையாளம் காணப்படாமல் உள்ள பகுதிநேர பணியாளர்களை அடையாளங்கண்டு நிரந்தரம் செய்ய வேண்டும்.
2. மின்வாரியத்தில் விரிவாக்கம், அபிவிருத்தி மற்றும் புதிய மின் இணைப்புகள் வழங்க தளவாட பொருட்கள் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. இதனால் பணிகளை விரைந்து செய்ய முடியாமல் உள்ளது. தளவாட பொருட்களை விரைந்து வழங்கிட ....
3. மின் உற்பத்தி நிலையங்ளில்உள்ள வாரியக்குடியிருப்புகளில் சாலை வசதிகளை, செப்பனிட.....
4. கொரானா தொற்று நோயால் இறந்த தொழிலாளர்களின் பொறியாளர்களின் வாரிசு வேலை தாமதமின்றி வழங்கிட....
5. மின் தொடரமைப்பு கழகங்களில் தரமான உயர்மின் கோபுரங்கள் இன்சுலேட்டர் உதரிபாகங்கள் வழங்கிட வலியுறுத்தி...
6. அனல் மின் நிலைய உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிகளை Out Sourcing முறையில் தனியாருக்கு விடுவதை கைவிடக்கோரி...
7. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் உடனடியாக வட்ட அலுவலகத்தை அமைத்திட வேண்டும் எனக்கோரிய....
8. மின்வாரியமே மின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட வலியுறுத்தியும், நீண்ட கால கொள்முதல் செய்வதை மறுபரிசீலனை செய்திட வலிறுத்தி...
9. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து, பழைய பென்சன் திட்ட நடைமுறை தொடர வலியுறுத்தி....
10. மாற்றுத்தினாளிகள் அலுவலகம் வந்து சென்றிட சாய்தளம் அமைத்திட வலியுறுத்தி....
11. கரூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வளாகத்தில் தொழிற்சங்கங்களுக்கு சங்க அலுவலகம் கட்டித்தர வலியுறுத்தி....
12. உற்பத்தி வட்டங்களில் மருத்துவர், செவிலியர், மருந்தாளுனர் பதவிகளை Works Contract முறையில் விடுவதை கைவிட்டு, அங்கு பல ஆண்டுகளாக வாரியமே தினக்கூலியாக வழங்கி வரும் நிலையில் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரம் செய்திட வலியுறுத்தி....
13. மேற்பார்வை பொறியாளர்களின் நிதி வரையரை குறைத்ததை கைவிட்டு, நிதி வரையரையை அதிகரித்திட வலியுறுத்தி...

# மின் ஊழியர் மத்திய அமைப்பின் ஆண்டு சந்தா ரூ.250/-லிருந்து ரூ. 400/-ஆக உயர்த்த நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

மின் ஊழியர் மத்திய அமைப்பு ஆண்டு சந்தாவாக ரூ.250/- நேரடி உறுப்பினர்களிடம் பெற்று கிளைக்கு ரூ.100/-ம், மாநில மையத்திற்கும் ரூ.150/-ம் என பங்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது அனைவருக்கும், காலண்டர், டைரி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் சந்தாவாக ரூ.400/- நேரடி உறுப்பினர்களிடம் பெறுவது என்றும், அதில் கிளைக்கு 150/-ம், மாநில மையத்திற்கு ரூ. 250/- என பங்கீடு செய்வது எனவும், இந்த ஆண்டு சந்தா உயர்வை 2023-ம் சந்தாவிலிருந்து பெறுவது என்றும் அதற்கு தேவையான மத்திய அமைப்பின் உபவிதிகளில் திருத்தம் கொண்டு வருவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.






திருவண்ணாமலையில் சர்வதேச பெண்கள் தின கொண்டாட்டம்

# B.com, M.Com., திறந்தவெளி பல்கலைக் கழகத்தின் மூலம் படித்தவர்களுக்கு ஊக்க -ஆண்டுயர்வு வழங்குவது தொடர்பாக தெளிவுரை

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI
CHENNAI-2.

**Memo.(Per.) No. 42349/A16/A162/2020- 2, Dt : 24.02.2022.**

Sub: TANGEDCO – Establishment – Incentive increment for having passed B.Com/M.Com through Open University - Sanctioned – Audit Objection – Clarification - Issued.

Ref:
1. G.O. Ms.No.107,P&AR(M) Department, dated: 18.08.2009.
2. G.O. Ms.No.116,P&AR(M) Department, dated: 18.08.2010.
3. (Per.) FB TANGEDCO Proceedings No.5 (Adm. Br) dated: 08.04.2011
4. (Per.) B.P CMD Proceedings No.59 (Adm. Br) dated: 24.05.2013.

*****

In the Board's Proceedings third cited, orders were issued to the effect that a Diploma, Degree or Post Graduate Degree after a pass in SSLC($10^{th}$ Std), HSC (+2), Basic Degree only be considered for appointment/ promotion in the services of the TANGEDCO by adopting the Government orders first and second cited.

2. In the Board's Proceedings fourth cited, among other things orders were issued that for the purpose of promotion to the employees in Accounts Branch and Audit Branch, the relevant service regulation on the date of crucial date prescribing passing of B.com or M.Com or both as the case may be, either through formal system or through Open University should be applied only for the limited purpose of exemption from passing departmental exam.

3. A point of clarification has been arisen by the Chief Engineers/ Superintending Engineers whether the employees who have obtained B.Com/M.Com degree through open university without passing $10^{th}$,+2 and promoted as Accounts Supervisors from the post of Assistant (Accounts) based on the orders issued in (Per.) B.P CMD Proceedings No.59, (Adm.Br.) dated: 24.05.2013 are eligible for sanction of advance increments.

4. After careful examination, it is clarified that the employees who have obtained B.Com/M.Com degree through open university without passing $10^{th}$,+2 and promoted as Accounts Supervisors from the post of Assistant (Accounts) based on the orders issued in (Per.) B.P CMD Proceedings No.59, (Adm.Br.) dated: 24.05.2013, are not eligible for sanction of advance increments.

**A.MANIKKANNAN**
**SECRETARY**



# வல்லூார் அனல் மின் நிலைய ஒப்பந்த ஊழியர்களின் போராட்டத்தில் ஒரு சிறிய முன்னேற்றம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தேசிய அனல் மின் கழகமும் இணைந்து உருவாக்கப்பட்ட NTECL -ல் 3x500 mw உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு பணியாற்றும் 1500க்கும் மேற்பட்ட ஐ.டி.ஐ டிப்ளமோ, பட்டம் பெற்ற பொறியாளர்கள் என அனைவரும் ஒப்பந்த ஊழியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

ஏற்கனவே கடந்த 2021 மார்ச் 5ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்த பொழுது, விரைவில் ஊதிய உயர்வை பேசி தீர்வு காண்போம் எனக்கூறிய NTECL நிர்வாகம், கவனம் செலுத்ததாததை கண்டித்து 2022 பிப்ரவரி 2 முதல் வேலை நிறுத்தம் செய்தனர் ஊழியர்கள்.

இந்நிலையில் மத்திய அமைப்பு மின்வாரிய தலைவரோடு பேசி தலையீடு செய்து ஏதாவது ஒரு வடிவத்தில் ஊதியத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

போராட்டம் நடத்தும் NTECL க்கு CITU மாநில பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன், மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ். இராஜேந்திரன், தலைவர் டி. ஜெய்சங்கர், துணைப் பொதுச் செயலாளர் தோழர் கே. ரவிச்சந்திரன், திருவள்ளூர் மாவட்ட சிஐடியு தலைவரும், மத்திய அமைப்பின் முன்னாள் தலைவருமான தோழர் கே. விஜயன் ஆகியோர் சென்று வாழ்த்தி பேசினோம்.

இந்நிலையில் கடந்த 14.2.2022 அன்று கூடுதல் இணை ஆணையர் / தொழிலாளர் துறை அவர்கள் முன்பு நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தையில், நமது வாரியத் தலைவர் அவர்களின் தலையீடு காரணமாக Dust Allowance என்ற முறையில் unskilled, Semi skilled, skilled என்ற நிலையில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு முறையே ரூ. 600, 650, 700 என வழங்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

**போராட்டத்தின் விளைவாக**

**ஒரு சிறிய முன்னேற்றம் ஏற்பட்டது.**

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


|õÒ : 12.02.2022

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம்- வல்லூர் அனல் மின் நிலையம் - ஒப்பந்த ஊழியர்கள் - வேலை நிறுத்தம் தங்களது மேலான தலையீடு வேண்டுவது - தொடர்பாக

திருவள்ளூர் மாவட்டர் வல்லூரில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமும் தேசிய அனல் மின் கழகமும் இணைந்து உருவாக்கப்பட்ட NTECL-ல் 3X500 MW உற்பத்தி செய்யப்பட்டு வருவது தாங்கள் அறிந்ததே.

இம்மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து பணிகளையும் ஒப்பந்தம் முறையில் செய்வதற்கு யுடிலிட்டி பவர் டெக் என்ற நிறுவனத்திற்கு 5 ஆண்டிற்கு பணிகளை ஒதுக்கியுள்ளது. இது உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

NTECL-ல் நிர்வாகம் அனைத்து மின் உற்பத்தி சார்ந்த பணிகளை செய்திட யுடிலிட்டி பவர் டெக் நிறுவனத்திற்கு ஒப்படைத்தது போக NTECL நிர்வாகமே ஒப்பந்த முறையில் செய்து வருகிறது. இங்கு நிரந்தர தொழிலாளர்கள் என யாரும் இல்லை.

யுடிலிட்டி பவர் டெக் நிறுவனம் தன்னை முதன்மை நிர்வாகியாக இணை இயக்குநர் தொழிற்சாலை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு திருவொற்றியூர் அவர்களிடம் பதிவு செய்து கொண்டது. அதே போல NTECL நிர்வாகமும் தன்னை மற்றொரு முதன்மை நிர்வாகியாக பதிவு செய்து கொண்டு ஒப்பந்தகாரர்களாக, ஒப்பந்த தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குவதற்கு உரிமம் பெற்றுள்ளது.

ஒரு நிறுவனத்திற்கு இரண்டு முதன்மை நிர்வாகிகள் இருக்க முடியாது என்று இணை இயக்குநர் தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் திருவொற்றியூர் அவர்களிடம் 2018-ல் எங்கள் சங்கம் முறையிட்டு, அதை இணை இயக்குநர், தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் திருவொற்றியூர் அவர்கள் யுடிலிட்டி பவர் டெக் நிறுவனத்தின் பதிவை ரத்து செய்தார்.

மேலும் வல்லூர் அனல் மின் உற்பத்தி நிலையம் அரசுத்துறை நிறுவனமாகும். இதில் பணியாற்றும் அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களும் நிரந்தரமான பணிகளில் உற்பத்தி சார்ந்த பணிகளில் தொடர்ச்சியாக வேலை செய்வதை NTECL நிர்வாகமே ஒப்புக்கொண்டுள்ளது. சுமார் 1,500 ஒப்பந்த தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்கான கோரிக்கை வலியுறுத்தி கடந்த 2021 மார்ச் 5-ம் தேதி முதல் ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்பொழுது தமிழக சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்ப காரணத்தால் தேர்தலுக்கு பின்னர் பேசி முடிக்கலாம் என நிர்வாகம் உறுதியளித்தது. தேர்தல் முடிந்து9 மாதங்கள் கடந்த நிலையி நிர்வாகம் எந்தவித முடிவும் எடுக்காத காரணத்தால் தற்போது 2022 பிப்ரவரி 2 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் NTECL-இன் நிர்வாகக்குழு இயக்குனர் **(BOARD OF DIRECTOR)** என்ற முறையில் தாங்கள் தலையிட்டு ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள
(எஸ். இராஜேந்திரன்)
பொதுச் செயலாளர்

# NTECL -ல் ஏற்பட்ட ஒப்பந்தம்

**தொழிலாளர் துறை**

அனுப்புநர்

திருமதி உ. உமாதேவி,
பி.ஏ.பி.எல்., எச்.டி.சி.எம்.,
கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
தொழிலாளர் நல வாரியக் கட்டிடம் (6வது தளம்),
டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை,
சென்னை – 6.

பெறுநர்

1) பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு,
B.T.R. நினைவகம், அத்திப்பட்டு புதுநகர்,
சென்னை – 600 120.

2) எதிர்மனுதாரர்கள் / நிர்வாகம்,
I) NTECL வல்லூர் அனல் மின்நிலையம்,
வெள்ளிவாயல்சாவடி,
பொன்னேரி.
II) Utility Power Tech Limited,
NTECL, VTTP – Vallur,
Chennai - 600 120.

ந. க. எண். ஈ / 492 / 2022, நாள் 14.02.2022

அய்யா,

பொருள்: தொழிற்தகராறு – நிர்வாகம், NTECL வல்லூர் அனல் மின்நிலையம் – எதிர் – தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு – வேலைநிறுத்தம் – தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் மனு நாள் 15.11.2021.
2. நிர்வாகத் தரப்பில் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்பட்ட நாள் 08.02.2022.
3. சென்னை, தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்) -2 (கூ.பொ) அவர்களின் கடித எண்.ஆ/074/2021, நாள் 08.02.2022.

******

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வல்லூரில் செயல்பட்டு வரும் NTECL அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் சுமார் 1500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிக்கைகளை வலியுறுத்தி, 08.02.2022 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். இது குறித்து பல்வேறு தேதிகளில் இருதரப்பினரும் சமரச பேச்சவார்தையில் கலந்து கொண்டனர். இன்று (14.02.2022) நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருதரப்பினருக்கும் கீழ்கண்ட ஏற்புடைய அறிவுரை வழங்கப்பட்டது.

1. NTECL மற்றும் UPL நிறுவனம் தனது ஒப்பந்தாரர்கள் மூலமாக NTECL மற்றும் UPL ஒப்பந்த தொழிலாளிகளுக்கு 01.02.2022 முதல் சிறப்பு அலவன்ஸ் ஆக கீழ்க்கண்ட அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

| S.No. | Category | Special allowance (per Month) |
|---|---|---|
| 1. | Un - skilled | Rs. 600/- |
| 2. | Semi – skilled | Rs. 650/- |
| 3. | Skilled | Rs. 700/- |

2. இதன் அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தினை கைவிட்டு உடனடியாக பணிக்கு திரும்ப தொழிற்சங்கம் ஒப்புக் கொண்டது.
3. இந்நிறுவனம் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான நிறுவனம் என்னும் Public Utility வரையறைக்குள் வருவதாலும், தொழிற்தாவா நிலுவையில் உள்ளதாலும், வேலைநிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடாமல், சமரச பேச்சுவார்த்தை மூலம் தங்களது கோரிக்கைகளுக்கு தீர்வு காணுமாறு தொழிற்சங்கத் தரப்பினருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இந்த ஏற்புடைய அறிவுரையை ஏற்றுக் கொண்டு இருதரப்பினரும் கையொப்பமிட்டனர்.

நிர்வாகம்

(K.M. PRASHANTH)
AGM (HR)

தொழிற்சங்கம்

14/02/22

(T. JAYASANKAR)
(SATHISH.M)

14/2/22

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
சென்னை–6.

## 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு



தென் சென்னை 2




திருப்பத்தூர்



திருப்பூர்



திருச்சி

## 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு















## 1.12.2019 முதல் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வு உடன் வழங்க வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 08.02.2022 அன்று கோரிக்கைப்பட்டியல் வெளியீடு












Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 15.03.2022



பொதுக்குழு உறுப்பினர்கள்





பொதுக்குழுவை
வாழ்த்தி
ஓய்வு பெற்றோர்
நல அமைப்பின்
மாநில
துணைப் பொதுச்செயலாளர்
எம்.பாலசுப்பிரமணியன்



வரவேற்புரை
தோழர் எஸ்.ரெங்கராஜன்



மத்திய அமைப்பு – மின்கதிர் நிதிநிலை அறிக்கை
தோழர் எம்.வெங்கடேசன்



குடும்ப நல பாதுகாப்பு திட்ட நிதிநிலை அறிக்கை
தோழர் கே.பரந்தாமன்



அஞ்சலி தீர்மானம்
தோழர் எஸ்.அகஸ்டின்



நன்றியுரை
தோழர் எஸ்.ராஜாராமன்

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian